
# எங்கள் குருநாதன் நாடறிந்த சித்தர்; வீடு கண்ட முத்தர்



நல்லூரான் தேரடியில்
நான் கண்ட காட்சிகளை - கிளியே
எல்லோரும் கண்டிருப்பர் ஏகாந்தம் பெற்றிருப்பர்!

அன்புடன் திருமதி பரிமளரத்தினம் திருநாவுக்கரசு

விரோதி வருடம்
2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி

பரிமளரத்தினம் திருநாவுக்கரசு

அம்மையாரின்

90வது அகவை நாளை முன்னிட்டு

# எங்கள் குருநாதன் நாடறிந்த சித்தர்; வீடு கண்ட முத்தர்

என்னும் இந்த நூல்

வெளியிடப்படுகிறது

- பிள்ளைகள்

29.01.2010





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


பக்கம்

முன்னுரை ........ 3-4

நாடறிந்த சித்தர்; வீடு கண்ட முத்தர்
சிவயோக சுவாமிகள் ........ 5-12

நுழை வாயில்...
யோகரின் சூழலில் வாழ்ந்த குடும்பம்
குடிசை ஆச்சிரமமாய் வளர்ந்தது
சுவாமிகளின் வாழ்வும் சில சம்பவங்களும்

மங்களம் ஜெய மங்களம் ........ 13

கொழும்புத்துறை வாசர்; நல்லூரான் தாசர்
யோகர் சுவாமிகளின் நினைவழியா நினைவுகள் ........ 14-21

யோகர் சுவாமிகள் சரணம் ........ 22-23

யோகர் என்றொரு மேதை ........ 24-25

தலம் தொழுது நலம் பெறவே கூடிடுவீரின்றே! ........ 26-27

சுவாமிகள் சோதியுட் கலந்தமை ........ 28-29

படங்கள் பின் இணைப்பு ........ 30-35

சுவாமிகள் திருவடி தொழுவோம்! ........ 36

நற்சிந்தனை என்னும் நூலில் இருந்து
எங்கள் குருபரன் சிவயோக சுவாமிகள் அருளிய
திருப்பாடல்கள் ........ 38-100




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மனிதப் பிறவி மகத்தானது என்று மனிதர்களே பேசிக் கொள்கிறார்கள். ஆனால் அதன் மகத்துவத்தை இழந்து விடுவதனால் விரக்திகளும் நிம்மதிக்குறைவு களும் காண்கிறார்கள். இதற்கெல்லாம் மனிதம் தேய்ந்து போவதும் ஒரு காரணம். காரணம் இல்லாமற் காரியமில்லை. எம் பூமியிலே தெய்வீகமே உய்வீகம் தரும் என்று சொன்ன மறைஞானச் செல்வர்கள் பலர் கால்பதித்து வாழ்ந்தார்கள். அவர்களில் ஒருவர்தான் யோகர் சுவாமிகள். இவர்களோடு குழந்தைப் பருவத்தில் இருந்து பழகி தொண்டு செய்தவர் என் கணவர் திருநாவுக்கரசு அவர்கள். சுவாமிகள் அவரைத் 'தம்பி' என்று ஆராமையோடு அழைப்பார்கள்.

திருநாவுக்கரசு அவர்களை நான் விவாகம் செய்தமையாற் சுவாமிகளோடு பழகும் வாய்ப்பையும், அன்னாருக்குப் பணிபுரியும் வாய்ப்பையும் இறைவன் அருளினான் என்றால் நான் என்ன புண்ணியம் செய்தேன் என்ற எண்ணம் என்னை எப்போதும் அகமகிழ வைக்கிறது. பச்சைப் பாலகனாய் இருந்தபோது என் கணவரின் அப்பா மறைந்தாலும் தாயாரும் தாய்மாமனும் மாமியும் அவரைப் பேணி வளர்த்தது மட்டுமல்லாமல் இலுப்பை மரவேரில் இருந்த சுவாமிகளைத் தமது வளவில் இருந்த குடிசை யிற் குடியேற்றி ஆன பணிகளும் புரிந்தனர். எனவே அவர்கள் வழி என்கணவரும் நானும் எனது பிள்ளை களும் என் பெற்றோரும் என் உடன் பிறந்த சகோதரி பாக்கியரத்தினத்தின் குடும்பத்தினரும் சுவாமிகளோடு பழகவும் சேவை செய்யவும் அவரின் அருளாசியைப் பெறவும் முடிந்தது.

இன்றைய நாட்டு நிலைமை எம்மை வெளிநாடு களில் வாழவைத்தாலும் நாம் அப்பு சுவாமிகளோடுதான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றோம். இச்சூழ்நிலையில் அவர்களோடு தொடர்பான சம்பவங்களைக் கோவையாக்கி நூல் வடிவில் வெளியிடத் திருவருளும் குருவருளும் உந்து சக்தியாய் இருந்தன. நாம் சொன்னவற்றை வடிவமைப்புச் செய்து உதவியவர் பேரறிஞர் ஆழ்கடலான் அவர்கள். ஆக அவர்களுக்கும் நூலாக்கத்தோடு தொடர்புடையவர்கட்கும் அச்சகத்தார்க்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

குருநாதன் ஆசியால் அனைவரும் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல நல்லூரானை வேண்டித் தொழுது நிற்கிறேன்.

வில்வமர நீழலிலே
விச்சிராந்தி கண்டிடடி - கிளியே
வல்லவனாம் செல்லப்பன்
வாழ்ந்தவழி வாழ்ந்திடுவோம்

வதரிபீட மன்றிலாடும் பிள்ளையார்




**ஓம் தத் ஸத் ஓம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடறிந்த சித்தர்; வீடு கண்ட முத்தர் சிவயோக சுவாமிகள்

வடிவம்: சிற்றடியேன் முருகவே பரமநாதன் - கனடா

## நுழை வாயில்

"என்னையெனக் கறிவித்தா னெங்கள் குருநாதன்
இணையடியென் தலைவைத்தான் எங்கள் குருநாதன்
அன்னைபிதா குருவானான் எங்கள் குருநாதன்
அவனியெலாம் ஆளவைத்தான் எங்கள் குருநாதன்
முன்னைவினை நீக்கி விட்டான் எங்கள் குருநாதன்
மூவருக்கும் அறியவொண்ணா எங்கள் குருநாதன்
நன்மை தீமை யறியாதான் எங்கள் குருநாதன்
நான்தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்"

நற்சிந்தனை - பக்கம் 1

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே- அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே - அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே...."

"மாமுனிவோர் பலர் வாழ்ந்த பொன்னாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு"

- மஹாகவி பாரதியார்

இவ்வண்ணம் போற்றப்பட்ட தமிழர் வாழ்விற் சிந்தனை ஆயிரம் பிறக்க வேண்டும், சீரிய வாழ்வு சிறக்க வேண்டும் என்பர் நவீன சிந்தனையாளர். ஞானத்திலே பரமோனத்திலே உயர் நாடு பாரதமும் நம் ஈழமண்டலமும் ஆகும். விஞ்ஞான விளைவுகளின் மத்தியிலே மெய்ஞ்ஞானமே உலகைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணுகின்றது. ஈழத்து இறைவனைத் தமிழ் செய்த சிந்தனைச் சிற்பி, மாமுனிவர் மறைஞானி, கொழும்புத்துறை வாசன் மகா-யோக சுவாமிகள்.

சோதிமிகு நவ கவிதையாம் நற்சிந்தனையை வடித்த கவியோகி அவர். அதிலே ஒரு உயிரோட்டம் ஒலிக்கிறது. செல்லப்ப தேசிகனின் தத்துவ தர்சனம் ஒவ்வொன்றிலும் பளிச்சிடுகின்றது.

இதோ ஒரு புதிய சித்தாந்தம்:

"பொய் சொல்லாதே யென்பான்
மெய்யுஞ் சொல்லாதே யென்பான்
வல்லபங்கள் பேசி வந்தோர்
வாயை யடக்கிடுவான்
வித்தை யொன்றுஞ் செய்து காட்டான்
விவேக மற்றோர் போலிருப்பான்
அத்துவா மார்க்கம் விட்டு
ஆறி யிருந் திடுவான்"

நற்சிந்தனை பக்கம் - 338

எந்நாளும் அழியாத அழகுக் கவிதை இது. நல்லூர்த் தேரடியில் தன் குருநாதனான செல்லப்பா சுவாமிகளைக் கண்ட யோகரை மக்கள் கொழும்புத்துறைச் சந்தியில் அமைந்த இலுப்பை மரத்தடி வேரிலே கண்டனர். குருந்த நிழலிலே பெருந்துறைப் பிள்ளை உபதேசம் பெற்றார். கல்லால மர (இத்தி) நிழலிலே நால்வருக்கு அறம் உரைத்தார் ஆதிகுரு தென்முகக் கடவுள். ஆலிலையிலே கண்ணன் கண் துயின்றான். கடம்பு முருகனோடும், அரசு புத்தரோடும் தொடர்புடையன. இலுப்பை வரலாறு படைத்த மாவிருட்சமாய் விட்டதும் புதுமையே. இப்படி வீற்றிருந்த யோகநாதனைத் தமது வீட்டிலே வந்து இருங்கள் எனப் பவ்வியமாய்க் கேட்டு வரவேற்றவர்கள் திருநாவுக்கரசு என்பவரைப் பெற்ற அன்னை தங்கம்மாவும் தாய் மாமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லிபுரமும் ஆவர். அவர்களது வேண்டுதலை ஏற்றுக் குடிசையில் வந்து வசிக்க சுவாமிகள் சம்மதித்தார்.

இவ்வாய்ப்பு கருவிலே திருவுடைய அக்குடும்பத் தினர்க்கு வாராது வந்த செல்வமாகும்; செல்லப்பன் என்ற சீமானின் கடாட்சமுமாகும். இவ்வரிய வாய்ப்பினாலே அக் குடும்பத்தினர் ஆத்மீக காற்றைச் சுவாசித்தமை இறை அருள் எனலாம். ஒரு யோகி எப்படி அமைவான் என்பதைப் பாரதி இப்படிப் பாடினான்.

"பக்கத் திருப்பவர் துன்பம் - தன்னைப்
பார்க்கப் பொறாதவன் புண்ணிய மூர்த்தி
ஒக்கத் திருத்தி உலகோர் நலம்
உற்றிடும் வண்ணம் உழைப்பவன் யோகி"

- பாரதி பாடல்

இவ்வண்ணம் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்து ஆயிரத்துக் கதிகமான பிறைகண்ட சுவாமிகள் 1912 ஆம் ஆண்டிலே அவர்களின் இல்லத்தில் அடியெடுத்து வைத்தார் கள். அப்போ தந்தையை இழந்த திருநாவுக்கரசுவுக்கு வயது மூன்று. தந்தையற்ற சுவாமிகள் மாமியின் நிழலில் வளர்ந்தார். நாவுக்கரசுவும் தாய்மாமன் தயவில் வளர்ந்தார்.

## யோகரின் சூழலில் வாழ்ந்த குடும்பம்

திருநாவுக்கரசுவின் பிஞ்சு வயதிலே தந்தை சம்பந்தர் மறைந்து போனார். தாய் தங்கம்மாவின் அரவணைப்பிலே மைந்தன் ஆட்பட்டான். தாய் தங்கம்மா கணவனைப் பறி-கொடுத்ததால் கைமை நோற்று சாமிப்போக்கிலே வாழ்ந்தார். சுருக்கமாகச் சொன்னால் தலை வாருவதையே விட்டுவிட்டார். இவரது உடன்பிறப்பான (தம்பி) சின்னத்தம்பி வல்லிபுரம், மனைவி நாகவல்லி இருவரும் வரலாறு படைத்தவர்கள். நாகவல்லி ஒரு மங்கையர் திலகம். அவரின் பங்கயக் கை நலம் பல அறங்களைக் கொண்டது. வல்லிபுரம் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரி செல்லியாதீவில் உடையார் வேலை பார்த்தார். இவர் மருமகன் திருநாவுக்கரசுவை சென் ஜோன்ஸ் கல்லூரியில் விட்டுப் படிக்க வைத்தார். அவரும் ஒழுங்காகப் படித்து மோர்கன்ரைஸ் வங்கியில் வேலை பார்த்தார். இவருக்கு சின்ன வயதிலே யோகர் சுவாமிகளைப் பார்க்கும் பாக்கியம் கிடைத்தது. வளர்ந்து அம்மகானின் வாசனையை நுகர்ந்தார். இத்தொடர்பு 52 ஆண்டுகள் நீடித்தது. முற்பிறவியிலே திருநாவுக்கரசு எனக்குத் தம்பி என்று யோகர் சுவாமிகள் சொன்னார். எனவே "தம்பி திருநாவுக்கரசு" என்றே கூப்பிட்டார். திருநாவுக்கரசுவும் சிறு தொண்டன் ஆனார். சிவ தொண்டன் கண்ட யோகர் ஒருமுறை சிவதொண்டன் நிலையத்தில் மூன்று நாட்கள் தங்கி இருந்தார். அக்காலவேளை "தம்பி திருநாவுக்கரசுவுக்கு இந்த உடம்பு சொந்தம்; கடைசியில் அவனுக்குக் கொடுத்துவிடவேண்டும்" எனக் கூறியும் இருந்தார். திருநாவுக்கரசு வேலைப்பழு காரணமாக நேரத்துக்கு வரவில்லையானால் சுவாமிகள் பாடசாலைச் சந்தியிலே போய் வரவை எதிர்பார்த்து நிற்பார். அவரின் தாயாரும் படலையைத் திறந்து வழிமேல் விழியாய் இருப்பார். இறைவனைக் காண வேண்டும் என்ற துடிப்பும் பதைப்பும் சுவாமிகளுக்கும் ஆருயிர்க் கூட்டத்தினருக்கும் உண்டு.

திருநாவுக்கரசு சந்ததிக்கே அவர்தான் ஒரு வாரிசு. அவரின் தாய்வழிச் சகோதர, சகோதரிகட்குப் பிள்ளைப் பாக்கியம் இல்லை. திருநாவுக்கரசு திருமண வயதை அடைந்த போது பரிமளரத்தினத்தைக் கைப்பிடித்தார். கங்கையும் யமுனையும் கலந்ததுபோல் இல்லறம் பரிமளிப்பாய் நடந்தது. பரிமளரத்தினம் மூன்று பிள்ளைகளுக்குத் தாயானார். அம் மூவர்க்கும் சுவாமிகளே பெயர் வைத்தார். முதல் மகளுக்குச் செந்தூர்ச்செல்வி, இரண்டாவது ஆண் குழந்தைக்குத் திருஞானசம்பந்தர் (பரம்பரைப் பெயர்), மூன்றாவது மகளுக்குத் திருமகள் என நாமகரணஞ் செய்தார். பிள்ளைகள், பெற்றோர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமன், மாமி எல்லாருமே சுவாமிகளை "அப்பு, அப்பு" என அன்புடன் அழைத்தனர். சுவாமிகளும் வாத்ஸல்யத்தோடு "தம்பி, தங்கச்சி" எனக் கூப்பிட்டார்.

இறைவனை "அரசனே அன்பர்க்கு அடியனேன் உடைய அப்பனே" எனப் பாடினார் மாணிக்கவாசகர். திருவாசகந் தந்த மணிவாசகனை, "திவ்விய மாணிக்கர்" எனப் பாடியுள்ளார் மகா யோக சுவாமிகள். "எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நான் என்றான்" எனப் பாரதி பாடிய பாடலிலே நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய், பண்பிலே தெய்வமாய், பார்வையிலே சேவகனாய் என வருகிறது. இதேபோலச் சுவாமிகளும் ஒன்றியிருந்தார். சுவாமிகளும் அதிகாலை எழுந்து மாட்டுத்தொழுவம், வேப்பம் சருகு என்பனவற்றைக் கூட்டிப் பெருக்கி ஒரு வைக்கற்தூள் கூடப் பொறுக்க முடியாதபடி புனிதமாக்கினார். பசுக்களுக்கு செங்கமலம், இலட்சுமி எனப் பெயர் வைத்துக் கூப்பிட்டார். அப்பசுக்கள் பால் கறந்து முடிந்ததும் நேரே அவரின் இருக்கைக்குப் போகும். அவர் வாழைப்பழம் கொடுத்துத் தடவிக் கொடுப்பார்.

"கண்ணன் எனதகத்தே கால்வைத்த நாள்முதலாய்
எண்ணம் விசாரம் எதுவும் அவன் பொறுப்பாய்ச்
செல்வம், இனமாண்பு, சீர், சிறப்பு, நற்கீர்த்தி,
கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம்
தெளிவே வடிவாஞ் சிவஞானம் என்றும்
ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கிவருகின்றன காண்"

- இந்தயுகப் புலவன் பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடிசை ஆச்சிரமமாய் வளர்ந்தது

வல்லிபுரம், திருநாவுக்கரசு வசித்த வளவின் மேற்குப் புறத்தில் ஒரு ஓலைக் குடிசை இருந்தது. இதில் நன்னியர் என்பவர் ஒரு செலவு (சில்லறைக்) கடை நடத்தினார். அவருக்கு யோகரின் குருவான செல்லப்பரில் அளவற்ற பக்தி. ஆனால் அவருடன் பேசவும், வாக்குப் பெறவும் வேண்டும் என்ற ஆசை கிடைப்பதாய் இல்லை. ஒருநாள் ஊரெங்கும் உலாவும் செல்லப்பரைக் கண்டு தன் குடிசை வாசலில் இருந்த கப்பிலே கட்டி கற்பூரம் ஏற்றி வணங்கி, "எல்லோருக்கும் சொல்லுகின்றாய் எனக்கும் சொல்" என தன் கஷ்டத்தின் பேரிற் கேட்டார் நன்னியர். "தந்திட்டேன், தந்திட்டேன்" என்றதும் செல் லப்பருக்கு விடுதலை கிடைத்தது. தேர் முட்டிப் படியில் செல்லப்பா சுவாமிகள் சொன்ன நான்கு வார்த்தைகளான திருவாக்குப் பலித்தது. சுவாமிகளின் அனுக்கிரகம் என்னவெல் லாஞ் செய்யும் என்பதற்கு இது ஒரு உதாரணம் எனலாம்.

திருநாவுக்கரசுவின் விருப்பப்படி குடிசையில் வந்து வசிக்க சுவாமிகள் சம்மதித்தார். முதன் முதலாக நன்னியரால் ஏற்றி வைக்கப்பட்ட கற்பூர ஒளி அதே இடத்தில் சுமார் ஐம்பது ஆண்டுகட்கு மேலாகியும் இன்றும் சுவாமிகளின் அடியார்களால் ஏற்றப்பட்டு வருகிறது. கற்பூர ஒளி, ஊது வர்த்தியின் சுகந்தம், கற்பூர வாசனை, பழவகைகளின் குவியல், மலர்களின் ஈட்டம், மக்களின் கூட்டம், திருமுறை ஓசை, மந்திர ஒலி, ஞானிகளின் வருகை என்பவற்றால் அவரது ஆச்சிரமத்தில் அலையடித்தது. துன்பச் சுமைகளை இறக்கி வைத்துவிட்டு மக்கள் மனமகிழ்வுடன் வீடு திரும்பினர்.

புதியவீடு கட்டுபவர்கள் ஆச்சிரமத்திற்கு வந்து அத்தி வாரம் போடுவதற்கு ஈழமா முனிவர் தீண்டிய புனித மண் எடுத்துச் செல்வர். சுவாமிகளின் சித்து அவ்வளவு மேன்மை யானது. வருபவர்கட்கு ஏச்சும் பேச்சும் கொடுப்பது அவரது செயற்பாடுகளில் ஒன்றாகும். ஆனால் அதைப் பொருட்படுத்தா மல் நின்று பிடிப்பவர் வெற்றி கண்டனர். இவ்வாறாக ஆச்சிரமம் வளர்ந்து இன்று இவ்விடம் சுவாமிகளின பாதபூசை செய்யும் ஆலயமாய் மலர்ந்து ஒளி வீசுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் அதிகாலை விழித்தெழுந்து தன் கடமைகளை மேற்கொண்டதும் போகவும் வரவும் திருவாசகங்களை இடைவிடாது படிப்பார். குரல் கனீரென்று இருக்கும். எந்நேரமும் சிவத் தியானத்துடன் இருப்பார்கள்.

"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்"

- பெரியபுராணம்

சுவாமிகள் வெள்ளை வேட்டி கட்டி, வெள்ளைச் சால்வை போட்டு, குடையுடன் புறப்படுவார். பாதங்கள் காலணி காணாதவை. காலை புறப்பட்டு மாலையில் வதிவிடம் வருவார். காலை உணவு உப்புக்கஞ்சி. இரவு உணவு பலகாரம். திருமதி திருநாவுக்கரசு ஆசார அனுஷ்டானங்களுடன் உணவு தயாரித்து வழங்குவார். இப் பெண்மணியை அரசு அம்மையார் என்றே அன்பர் பலர் எழுதுவர்.

சுவாமிகள் அன்பர் திருநாவுக்கரசுவின் பிள்ளைகளுக்குச் சுகமில்லை எனின் குடிநீர் அவியுங்கோ, மருந்து எடுங்கோ எனத் துடிப்பார். இறைவனின் சௌலப்பியம், சௌசீல்யம், சுவாமித்துவம், வாத்ஸல்யம் என்னும் நான்கு குணங்களில் வாத்ஸல்யம் தாயன்புக்கு நிகரானது. ஆத்மீக அருட்செல்வர்கள் அந்நெறியில் வாழ்பவர். சுவாமிகளும் புறம்பானவரல்லர். திருநாவுக்கரசு வேலையால் வந்தபின் மாலையிற் தூய்மையுடன் கற்பூர தீபம் ஏற்றி, சுவாமி அருகே அமர்ந்து சிவபுராணம் படிப்பார். சிலசமயங்களில் சுவாமிகளும் பண்ணோடு ஓதுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமிகளின் வாழ்வும் சில சம்பவங்களும்

வல்லிபுரம் அவர்கள் செல்லியாதீவு (பூநகரி) என்னும் இடத்தில் உடையார் உத்தியோகம் பார்த்தார். பூநகரியில் கமம், சொந்த வீடு வைத்திருந்தார். மக்கட் செல்வம் இல்லை. மருமகன் திருநாவுக்கரசையே மகனாக நடத்தினார். அக்காலத்திற் கொழும்புத்துறையில் இருந்தே பூநகரிக்குக் கடல் வழிப்பயணம் இருந்தது. இதைப் பொன்னகரி என்றும் அழைப்பர். வரலாற்றுச் சுவடுகள் நிறைய அங்குண்டு. சுவாமிகள் இடையிடையே வல்லிபுரத்தாருடன் கமத்துக்குப் போய் சிலநாட் தங்கி வருவார். அண்மையிலே ஒரு அம்பாள் ஆலயம் உள்ளது. சுவாமிகளும் அங்கே போவார். சுவாமி-களைக் காணவும் திருவாக்குகள் பெறவும் மக்கள் நிறைய வருவர். பொருட்களுடன் வந்து சமைத்து உணவு பரிமாறுவர். மக்களோடு உரையாடி மீண்டும் கொழும்புத்துறைக்குத் திரும்புவார். இப்படி ஒருமுறை போனபோது "செல்லியாதீவு நாயூராய்ப் போகும்" என்று சொன்னார். அவர் வாக்குப் பலித்தது. நெற்களமாய் இருந்த செல்லியா தீவில் இப்போ மனித நடமாட்டமே இல்லை. காரணம் யுத்தக் கெடுபிடி.

சுவாமிகள் தனது நற்சிந்தனையில்

"பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே
ஆறுமுகன் தஞ்சமெடி"

எனப் பாடியமை இன்றைய அவலங்களை அறிந்து போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம் ஜெய மங்களம்

சுவாமிகள் வழமைபோல் மாட்டுக் கொட்டில்களைத் துப்பரவு பண்ணினார். இடையிலே மாடுகளைப் பார்க்கப் போகும்போது பசுமாடு ஒன்று காலைத் தூக்கிக் கொண்டு வந்தபோது கால் தடக்கி விழுந்தார். அவரால் எழும்ப முடியா மல் போனமையால் கதிரையிற் தூக்கிவைத்து வைத்திய சாலை எடுத்துச் சென்றனர். அங்கு சிகிச்சை நடைபெற்றது. எனினும் அவரால் சிகிச்சையின்பின் நடக்க முடியவில்லை. 3 வருடங்களாக சக்கர வண்டியின் உதவியோடு இருந்தார்.

குருதேவரது புனித யாத்திரை 1964ஆம் ஆண்டு நிறைவானது. அவரது இறுதி அஞ்சலி ஊரெங்கிலும் இருந்து வந்த அவரது அன்பர்களின் அழுகுரல்களோடு நடைபெற்றது. அவரது அஸ்தி வைத்து, ஆச்சிரமத்தில் ஆலயம் அமைத்து, திருவடிப் பூசை நடைபெறுகிறது.

இப்பூசையில் திருநாவுக்கரசு மறையும்வரை பங்கு பற்றினார். கொழும்பு, லண்டன், ரொரன்ரோ முதலிய தலை நகரங்களில் சிவதொண்டன் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. சுப்பிரமணிய சுவாமிகள் ஹவாயில் யோகர் பெருமானின் பெரும் புகழைப் பரப்புகின்றார். ஆயிலிய நட்சத்திரம் நற் சிந்தனை நாதனை நினைவுகூர்கிறது. செல்லப்பனென்ற சீமானின் மந்திரங்கள் நற்சிந்தனையில் திருவாய் மொழியாகப் பதிந்துள்ளன.

எப்பவோ முடிந்ததென எந்தை குருநாதன் செப்பும்
திருவாக்கின் சீர் தருவாய் பராபரமே.

ஒரு- பொல்லாப்புமில்லை என்பான்,
உண்மை முழுதுமென்பான், நாமறியோமென்றான் உந்தீபற

நாமறியோமென்று சொல்லும் நாதனுக்கு மங்களம்
உண்மை முழுதுமென்ற உத்தமர்க்கு மங்களம்

அப்பு சுவாமியின் திருவடிகளே சரணாலயம்

ஓம் தத் ஸத் ஓம்

25 வருடங்கள் சுவாமிகளுக்குத் தொண்டு செய்து
அவரது அருளாசி பெற்ற
திருமதி பரிமளரத்தினம் திருநாவுக்கரசு, கொழும்புத்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத்துறை வாசர் நல்லூரான் தாசர் யோகர் சுவாமிகளின் நினைவழியா நினைவுகள்

கொழும்புத்துறையில் சைவமும் தமிழும் போற்றும் வேளாண் குலத்தில் பிறந்தவர்தான் சின்னத்தம்பி வல்லிபுரம். இவர் பூநகரியைச் சேர்ந்த செலியா தீவில் உடையாராகக் கடமையாற்றியவர். இவர் திரு. திருமதி கதிரித்தம்பியின் ஏகபுத்திரியான நாகவல்லியை விவாகம் செய்தார். வல்லிபுர உடையாரின் சகோதரி தங்கம்மா, அராலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சிற்றம்பலம் சம்பந்தர் என்பவரை மணம் புரிந்தார். இவர்களுக்கு ஒரே ஒரு மகன். இவர்தான் திருநாவுக்கரசு. இவர் மூன்று வயதுக் குழந்தையாய் இருக்கும்போது தந்தையைப் பறிகொடுத்தார். இவர்தான் பிற்காலத்தில் யோக சுவாமிகளோடு நெருக்கமான தொண்டராய் இருந்தார்.

வல்லிபுர உடையாரின் வளவின் ஒரு பக்கத்தில் கொட்டில் ஒன்று இருந்தது. அக்கொட்டிலிலே நன்னியர் என்பவர் கடை நடத்தி வந்தார். இவர் செல்லப்பா சுவாமி களில் ஆழ்ந்த பக்தியுள்ளவர். ஒருதினம் செல்லப்பா இக்கடை இருந்த வீதிவழியே போய்க் கொண்டிருந்தார். அவரைக் கண்ட நன்னியர் பக்தி ஆவேசத்தில் அவரிடம் ஏதும் அருள்வாக்கு கேட்க வேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்டு அவரைப் பிடித்து கொட்டில் வாசலின் முன்பிருந்த கப்பிலே கட்டினார். பின்பு கற்பூரத்தைக் கொழுத்தி நிலத்திலே வீழ்ந்து கும்பிட்டார். அப்போ செல்லப்பா "தந்திட்டேன், தந்திட்டேன்" என்று கத்தினார். அதன் பின்தான் நன்னியர் சுவாமிகளை அவிழ்த்துவிட்டார். அன்று துவக்கம் அந்த றோட்டில் எரிந்த கற்பூரத்துக்கு அளவே இல்லை. அச்சம்பவம் நடந்து சிலகாலத்திற்குப் பின் நன்னியரும் கடையை விட்டுவிட்டுப் போய்விட்டார். அதனாற் கடை நடந்த இடம் வெறுமையாய் இருந்தது.

கடையின் ஒருபக்கம் முச்சந்தியில் உள்ளது. கரை-யோரமாக ஒரு பெரிய இலுப்பை மரம் இருந்தது. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலுப்பை மரத்தின் வேரில் யோகர் சுவாமிகள் வெய்யில் என்றும், மழை என்றும் பாராமல் வந்து இருப்பார். இதை நாளும் பொழுதும் கண்ட வல்லிபுர உடையாரும் மனைவி நாகவல்லியும் சகோதரி தங்கம்மாவும் சுவாமிகளை அந்தக் கொட்டிலிலே இருக்கும்படி கேட்டார்கள். சுவாமிகளும் சம்மதித்து அக்கொட்டிலில் அமர்ந்தார்.

சுவாமிகள் கொட்டிலுக்கு வரும்போது திருநாவுக்கரசு வுக்கு வயது மூன்று. இவர் அக்குடும்பத்தின் சந்ததிக்கே ஒரு மகன். இவரின் தாய்வழிச் சகோதரிகளுக்கும் பிள்ளைப் பாக்கியம் இல்லை. எனவே தகப்பனில்லாத இவரைத் தம் சொந்தப் பிள்ளைபோல தாய் மாமனாகிய வல்லிபுரம் மிக அன்புடனும் பாசத்துடனும் வளர்த்து வந்தார். திருநாவுக் கரசுவின் தாயார் தங்கம்மா அவர்கள் கணவனை இழந்த பின்னர் ஆலயங்கள், கொண்டாட்டங்களுக்குப் போவதில்லை. மிகுந்த தெய்வ பக்தியுடன் காலத்தைக் கழித்தார்.

கொட்டிலிலே வந்து இருந்த சுவாமிகள் வெளியே போகும் நேரமோ திரும்ப இருப்பிடத்துக்கு எப்போ வருவார் என்றோ யாருக்கும் தெரியாது. எனவே திருநாவுக்கரசுவின் தாயார் சமையல் முடிந்ததும் ஒவ்வொருநாளும் முதலில் சாப்பாட்டை எடுத்துக் கொண்டுபோய் சுவாமிகளின் கொட்டிலில் வைத்து விட்டுத்தான் தான் உணவு அருந்துவது வழக்கம். திருநாவுக்கரசுவும் பிஞ்சு வயதில் இருந்தே சுவாமிகளுக்குத் தொண்டுகள் செய்யும் பாக்கியம் பெற்றார்.

சுவாமிகளின் கொட்டிலுக்கு முன்பு வதிரிபீட மன்றுளாடும் விநாயகப் பெருமான் கோயிலும் அதற்கு அருகில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயமும் அமைந்துள்ளன. திருநாவுக்கரசு ஆரம்பக் கல்வியை கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்திலும் பின் மேற்படிப்பை பரியோவான் கல்லூரியிலும் (St. John's College) கற்றார். இவர் உயர் படிப்பை நிறைவு செய்ததும் (Commercial Bank) கொமேஷல் வங்கியில் உதவிச் சிறாப்பராக உத்தியோகம் செய்தார். அப்போது கொழும்புத்துறையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த பொன்னம்பலம் தங்கம்மா என்பவர்களின் மகள் பரிமளரத்தினத்தை 1940ஆம் ஆண்டு விவாகம் செய்தார். இவரது மூன்று பிள்ளைகளும் சுவாமிகளை அப்பு என்றுதான் அன்புடன் அழைப்பார்கள். அவர்களில் சுவாமிகளும் மிக்க பாசமும் பரிவும் உள்ளவராக இருந்தார்.

திருநாவுக்கரசு ஒவ்வொருநாளும் சுவாமிகளின் கொட்டிலில் மாலை ஆறுமணிக்குச் சிவபுராணம் படிப்பார். திருநாவுக்கரசு அவர்களைச் சுவாமிகள் தம்பி என்றுதான் கூப்பிடுவார்கள். தங்க ஏலாதி, மகா ஏலாதிக் குளிசைக-ளைக் குடிநீரில் சுவாமிகள் கரைத்துக் குடிப்பது வழக்கம். திருநாவுக்கரசர் காலை 5 மணிக்கு குடிநீரில் குளிசைகளைக் கரைத்துக் குடிக்கக் குடிப்பார். மாலையில் அடியார்கள் அதிகம் வருவதால் 7 மணிக்குப் பின் குடிப்பார். காலையிற் குடிநீர் குடித்தபின் சுவாமிகள் தேநீர் குடிப்பார். சுவாமிகள் தேநீரைச் சிரட்டையிலே தான் குடிப்பார். பின் உப்புக் கஞ்சியும் குடிப்பார். அதிகாலை 4 மணிக்கு திருமதி திருநாவுக்கரசு ஸ்நானஞ் செய்து, பசு மாட்டிலே பால் கறந்து, தேநீர் ஊற்றி வைப்பார். திருநாவுக்கரசு கொண்டுபோய்க் கொடுப்பார். பின்பு அங்கு வரும் அடியார்களுக்கும் தேநீர் கொடுக்கும்படி சுவாமி கூறுவார். செய்தி வருமுன்னரே தேநீர் தயாராகி விடும். திருநாவுக்கரசு அவர்களின் தாயார் சுவாமிகள் தேநீர் குடிப்பதற்கும் தங்க ஏலாதி, மகா ஏலாதி குளிசைகள் உரைப்பதற்கும் வட்டமான அளவான சிரட்டைகள் ஒவ்வொரு மாதமும் செதுக்கி வைப்பது அவரின் தொண்டாக இருந்தது.

கொழும்பில் இருந்து வரும் அடியார்கள் அநேகமாக Mail Trainல் வந்து புங்கங்குளம் புகையிரத நிலையத்தில் இறங்கி நேராகச் சுவாமிகளின் கொட்டிலுக்கு வருவார்கள். அவர்களுக்கும் உணவு கொடுக்கும்படி சுவாமிகள் சொல்வார் கள். சொல்லிச் சில விநாடிக்குள் உணவு கொட்டிலுக்குப் போய்விடும். அங்கு வந்தவர்கள் ஆச்சரியப் படுவார்கள். திருமதி திருநாவுக்கரசு அம்மையார் அடியார்களைக் கண்டவுடன் உணவு தயார் செய்து விடுவது அவரின் நிரந்தர வழக்கமாக இருந்தது. மாலையில் வரும் அடியார்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு கொடுத்துத்தான் சுவாமி அனுப்பு வது வழக்கமாய் இருந்தது. இதைத் திருமதி திருநாவுக்கரசு மனப்பூர்வமாகச் செய்து வழங்குவார். அடியார்கள் சென்றபின் சுவாமிகள் திருநாவுக்கரசு அவர்களின் இல்லத்திற்கு வந்துதான் இரவு உணவை அருந்துவார்கள். திருநாவுக்கரசு அவர்கள் தண்ணீர் ஊற்ற அவர் தானே சாப்பிட்ட தட்டைக் கழுவுவார்.

பின்னேரங்களில் திருநாவுக்கரசு அம்மையார் பால் கறந்தவுடன் பசுக்கன்றுகள் சுவாமிகளின் கொட்டில் வாசலுக்குப் போய்த் தலையாட்டும். சுவாமிகள் பூக்களும் வாழைப்பழமும் கொடுத்த பின்தான் அவை திரும்பிப் போகும் வழக்கம் உடையன. சுவாமிகள் அவைகளைச் செங்கமலம், லட்சுமி என்று கூப்பிடுவார். அவை துள்ளிக் கொண்டு ஓடிவரும் காட்சியும் அற்புதமானதுதான். சுவாமிகள் காலையிலும் மாலையிலும் மாட்டுக் கொட்டில் கூட்டுவது வழக்கம். தாய் குழந்தையோடு கதைத்துக் கதைத்து உணவு கொடுப்பது போல சுவாமிகளும் கொஞ்சங் கொஞ்சமாக வைக்கோலை எடுத்துக் கொடுப்பார். அதிகம் போட்டால் மிச்சம் விட்டு விடும். எனவே வைக்கோல் கொடுக்கும் போது மிச்சம் விடாமற் சாப்பிடும்படி சொல்லுவார். காலையில் அவரைத் தரிசிக்க வரும் அடியார்கள் அநேகமாக மாட்டுக் கொட்டிலிலேதான் சந்திப்பார்கள். மண் என்றும் சேறு என்றும் பாராமல் வீழ்ந்து வணங்குவார்கள். எவர் வந்தாலும் தன் வேலையைச் செய்து கொண்டே இருப்பார். மாலையிற் சுவாமிகள் படலையைத் திறந்ததும் பசுக்கள் "அம்மா, அம்மா" என்று கத்தத் துவங்கிவிடும். சீமைக் கிழுவங் குழை ஒடித்து அவைக்குக் கொடுத்த பின்தான் பசுமாடுகள் கத்துவது நிற்கும். குழந்தைகளைப் பொழுது போக்குவது போல பசுக்கன்றுகளை வாருங்கோ என்று சொல்லி ஒவ்வொரு நெட்டாகச் சீமைக்குழை ஒடித்துப் போடுவார்.

சுவாமிகளின் கொட்டிலுக்கு முன்பு விசாலமான வேப்பமரம் ஒன்று உண்டு. அது இலை கொட்டும்போது காலையும் மாலையும் சுவாமிகள் கூட்டுவார். மாரிகாலத்திலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைக்கவேண்டுமென்று வேப்பம் விதைகளையும் பொறுக்கிச் சேமிப்பார். அவர் வேப்பம் கொட்டைகளைப் பொறுக்கும் பொழுது அவரைக் காணவரும் அடியார்கள் முற்றத்திலேயே நிற்பார்கள். தனது வேலை முடித்தபின்தான் சுவாமி கொட்டிலுக்குள் போவார். சில சமயம் உங்கள் வேலையைப் போய்ப் பாருங்கோ; நான் என் வேலையைச் செய்கிறேன் என்றும் சொல்லுவார்.

சிறீலங்கா புத்தகசாலை உரிமையாளர் திரு. தெய்வேந்திரம் அவர்கள் கடைக்குக் காலை 8 மணிக்குப் போகும்போது அவருடன் சுவாமியும் பெரிய கடைக்கும் போவார். போகுமுன் தன்னுடைய வேலையைச் செய்து முடிக்கவேண்டும், அவன் வந்துவிடுவான் என்று மாட்டுக் கொட்டில் கூட்டப் போய்விடுவார். பின்புதான் உப்புக்கஞ்சி குடிப்பது வழக்கமாக இருந்தது. மாட்டுக் கொட்டில் கூட்டியபின் உப்புக்கஞ்சி குடித்துவிட்டு ஆயத்தமாக இருப்பார். சிலவேளை தன்வேலை முடியாவிட்டால் காரை அனுப்பிவிட்டுப் பெரியகடைக்கு நடந்தே போவார். காலில் ஒன்றும் அணிவதில்லை. வெள்ளை வேட்டி, வெள்ளைச் சால்வை, ஒரு குடை, யாழ்ப்பாணம் முழுவதும் நடையிலே தான் போவார்.

சுவாமிகளின் இருப்பிடத்துக்கு முன்னால் இருந்த விநாயகர் ஆலயத்திலும் சிவராத்திரி கொண்டாட வகை செய்தார். பின்பு காலை 8 மணிக்குத் திருநாவுக்கரசுவுடைய இல்லத்திலே எல்லாரும் வந்து உணவு அருந்திச் செல்வார்கள். பண்டிதர் கா. கி. நடராஜன் அவர்கள் சிவராத்திரி தினங்களில் புராணத் திற்குப் பயன் சொல்லுவார். பிள்ளையார் கோவிலின் பூந்தோட்டத்தில் 3 அடிச் சதுரமான சீமேந்தினால் கட்டப்பட்ட சிறு மேடை இருந்தது. அதில் சுவாமிகள் திருவடி வைத்துப் பூசை செய்தார். பின்பு தனது கொட்டிலில் பங்குனி இரண்டாம் திங்கள் திருவடிப் பூசை செய்வித்தார்.

சுவாமிகளுடனும் செல்லப்பருடனும் கூடித்திரிந்த அடியார்கள் திருஞானசம்பந்தர் (விதானையார்), துரையப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுடன் சுவாமி அந்நியோன்னியமாய்க் கதைப்பார். திருவடிக்கு விதானையார் அபிஷேகம் செய்வார். திருநாவுக் கரசு சிவபுராணம் படிப்பார். துரையப்பா அவர்கள் தேவாரம், நற்சிந்தனை படிப்பார்கள். பங்குனி முதற் திங்கட்கிழமை கொழும்புத்துறையில் வாழ்ந்த அப்புக்குட்டி என்பவருடைய வண்டிலில் சுவாமிகளும், துரையப்பா அவர்களுடன் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்குச் சென்று பொங்குவர். முதல்நாள் இரவே துரையப்பா அவர்கள் வந்து கோயிலுக்குக் கொண்டு போக வேண்டியவற்றிற்கான ஆயத்தங்களைச் செய்து, கொட்டிலிலே சுவாமியுடன் தங்கியிருந்து அதிகாலை 4 மணிக்குப் புறப்படுவார்கள். மாலை 3 மணியளவிற் திரும்பி விடுவார்கள். "வீரமாமயில் ஏறும் வேலவ, எங்கள் குருநாதன் எழில் நல்லைவாசன் திருவருள் கைகூடுது" என்னும் நற் சிந்தனைகளை ஒவ்வொருநாளும் துரையப்பா அவர்களைப் படிக்கும்படி சொல்லுவார். துரையப்பாதான் தன்னுடைய ஆஸ்தான வித்துவான் என்பார் சுவாமி. தன்னுடைய உடம்பை எரிக்கும்படி துரையப்பா அவர்களிடமே சொல்லி வைத்தார்.

திருநாவுக்கரசு அவர்களின் கமம் பூநகரியில் உள்ள செல்லியா தீவில் உள்ளது. வல்லிபுர உடையார் 1945ஆம் ஆண்டு காலமானார். அதன்பின் வல்லிபுர ஆசிரியர் என்பவரைத் திருநாவுக்கரசுவின் கமத்தைப் பார்க்கும்படி சுவாமிகள் கமத்தில் இருத்தினார். இவர் சுவாமியின் ஆழ்ந்த பக்தர். சுன்னாகத்தில் வாழ்ந்த ராகவன் ஐயாவுடன் கமத்தைப் பார்க்கச் சுவாமிகள் மோட்டார்க் காரில் செல்வார். வல்லிபுர ஆசிரியரை "வல்லிபுர மாஸ்டர்" என்றுதான் எல்லோரும் சொல்வார்கள். சுவாமிகள் அவருடன் சிலதினம் தங்கித்தான் கொழும்புத்துறை வருவார். செல்லியா தீவில் உள்ள அம்மன் கோயிலில் அன்னதானம் கொடுக்கும்படி சுவாமி சொல்லுவார். சுவாமிகள் அரியாலையிலுள்ள சித்தி விநாயகர் கோவிலிலும் ஒருமாதச் சதுர்த்தி தினத்திலன்று மோதகப் பூசை செய்விப்பார். கோயில் அறங்காவலர் பிரசாதம் கொண்டு வருவார். அப்போது அங்கு இருக்கும் அடியார்கள் எல்லாருக்கும் பிரசாதம் கொடுப்பார். ஹவாய் சுப்பிரமணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளும் சுவாமிகளின் கொட்டிலுக்கு வந்து தரிசித்துப் போவார். சுவாமிகள் மகாசமாதியான பின்பும் தன் சீடருடன் ஆச்சிரமத்திற்கு அவர் வந்து போவார்.

நற்சிந்தனைப் பாடல்களை வெளியிடுவதற்கு ஊக்க மெடுத்த திருமதி இரத்தினம் நவரத்தினம் அவர்கள் சுவாமி யின் முன்னிலையில் முதல் நற்சிந்தனைத் திரட்டை வைத்து வணங்கியபோது திரு. திருமதி பிரமானந்தா நாகேஸ்வரி குடும்பம் கொட்டிலில் இருந்தார்கள். சுவாமி நற்சிந்தனையை திருமதி நாகேஸ்வரி பிரமானந்தாவிடம் கொடுத்து "கூத்தாடுதே மனம்" என்ற பாடலைப் பாடும்படி கூறினார். முதன்முதல் சுவாமியின் நற்சிந்தனை திருமதி நாகேஸ்வரி பிரமானந்தா அவர்களாற்தான் பாடப்பட்டது.

சுவாமிகள் மாலையிற் கொட்டிலுக்கு வந்தவுடன் குடையை வைத்துவிட்டு நேராக மாட்டுக் கொட்டிலுக்குப் போவது வழக்கம். அன்றும் வழமைபோல் பசுக்கள் சுவாமி யின் வருகையைக் கண்டு கத்தத் தொடங்கின. சுவாமியின் கொட்டில் கால்வாசிக்கு அரைச்சுவர் வைத்துப் பிரித்திருந்தது. அதற்குள் கொடி இரு வளையிலும் தொடுத்துக் கட்டப் பட்டிருந்தது. அதில் வேட்டி சால்வையைப் போடுவார். குடையைக் கொழுவி விடுவார். அன்று குடையைக் கொழுவி விட்டு நேராக மாட்டுக் கொட்டிலுக்குப் போய் வைக்கல் போட்டுவிட்டுக் கூட்டிக் கொண்டு நிற்கும்போது தாய்ப்பசு காலைத் தூக்கிக் கொண்டு முன்னுக்குவர சுவாமி பின் பக்கமாக அடியெடுத்து வைக்கும்போது (1961 மாசி மாதம்) கால்தடக்கி விழுந்து விட்டார். "டேய் தம்பி" என்று உரத்துக் கூப்பிட்டார்.

அந்தச் சத்தம் கேட்டு திருநாவுக்கரசுவும் மனைவியும் ஓடிப் போனார்கள். சுவாமி எழும்ப முடியாமல் இருந்தார். இலுப்பை மரத்தின் அருகில் ஐயர் கடை ஒன்று இருந்தது. திருநாவுக்கரசர் அங்குபோய் நின்ற ஆட்களைக் கூட்டிவந்து, சாய்மனைக் கதிரையொன்றில் இருத்தி தூக்கிச் சென்று வீட்டில் வைத்துப் பின் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுபோய் மறுநாள் சத்திர சிகிச்சை செய்து 3 மாதம் வைத்தியசாலையில் இருந்தார். வலதுபக்க இடுப்பெலும்பு முறிந்தபடியால் அவருக்குப் பின் நடக்க முடியாமற் போய்விட்டது. அவருக்கு வசதியாக கொட்டிலுக்கு அருகில் ஒரு அறைகட்டி ஆஸ்பத்திரியால் வந்தபின் அதிலே சுவாமி இருந்தார்.

சுவாமிகளின் உயிர் அடங்கும்போது அங்கு நின்ற அடியார்கள் சிவபுராணம் ஓதினார்கள். பங்குனி மாத மூன்றாந் திங்கள் அண்மையில் இருக்கும் நாச்சியார் அம்பாள் 3 மணிக்கு சுவாமியின் கொட்டிலைத் தாண்டிய பின்தான் சுவாமிகளின் உயிர் அடங்கியது. சுவாமியின் பூத உடலுக்குத் திருநாவுக்கரசு அவர்கள் அபிஷேகம் செய்தார்கள். திருநாவுக்கரசு அவர்களே சிதைக்குத் தீ மூட்டினார்கள். பெண்கள் சிதை யைச் சுற்றி அடியெடுத்தனர். ஆண்கள் சுற்றி வலம் வந்தனர். அன்று இரவு 7 மணிபோற் சுவாமிகளின் அஸ்தி எடுக்கப் பட்டது.

சுவாமிகள் வாழ்ந்த திருநாவுக்கரசுவின் முதுசமான காணிக்குள் இருந்த ஆச்சிரமத்தைத் திருமதி பரிமள ரத்தினம் திருநாவுக்கரசு அவர்கள் தர்மசாதனமாக சிவதொண்டனுக்கு 1996ஆம் ஆண்டு கையளித்துள்ளார். அதே வளவில் அருகில் இருந்த திருநாவுக்கரசு அவர்களின் சந்ததியினர் இல்லத்தையும் திரு. திருமதி பாலகிருஷ்ணன் செந்தில் செல்வி தம்பதிகள் தர்மசாதனமாக சிவதொண்டனுக்கு கையளித்துள்ளனர்.

வரலாறு சொன்னவர்:
திருமதி பரிமளரத்தினம் திருநாவுக்கரசு அவர்கள்

எழுத்திற் தந்தவர்
"ஆழ்கடலான்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகர் சுவாமிகள் சரணம்

ஈழமணித் திருநாட்டின் வடபாலுள்ள
 எழிற்கொழும்புத் துறையெனுமோர் பதியில் மேவி
வாழவழி வகுத்திட்ட ஞான பானு
 வடிவெடுத்தாற் போன்றவொரு மூர்த்தியாகி
ஆழமதாய் நெஞ்சிலுள் அகந்தை யெல்லாம்
 அகழ்ந்தெடுத்து அருள்நோக்கால் ஆப்த வாக்கால்
மாழவகத் திருள்கடிந்த மகானாம் யோக
 மகரிஷிதன் மலரடிகள் வந்திப்போமே.

செல்லப்பாச் சுவாமிகளின் சீடனாகிச்
 சிறப்புறு நல்லூர் வேளைச் சிந்தைவைத்து
செல்லாச் சியம்மை முதல் அடியாரோடு
 செறிவுடைய சித்தாந்தக் கலைகள் முற்றி
கல்லாரே யாயிடினும் கண்டார் நீங்காக்
 காருண்ய மூர்த்தியாய்க் காட்சி தந்து
எல்லார்க்கும் பரகதியை அளிக்கவல்ல
 எமது குரு யோகனடி இறைஞ்சி வாழ்வோம்.

சிவதொண்டன் இதழால்நற் சிந்தை தந்து
 தியான மண்டபமதனாற் திருந்த யாரும்
பவமாம்நோய் பகலவன்முன் பனியேயாகிப்
 பறந்தோடப் பார்வையினால் அகற்றும் சோதி,
தலமுனியே! சார்ந்தமனை தலமே யாகும்
 சங்கரனோ டொன்றித்த யோக ஸ்வாமி
சிவஞானப் பாதமலர்கள் சிந்திப்போமே
 செய்தவினை முதலோடும் சிந்திப்போமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் ஞானம் பழுத்த சிவ வடிவே போற்றி
அகிலமெலாம் தொழுமடியார்க் கருள்வாய் போற்றி
இருள் நிறைந்த அகமதனிற் கிரவீ போற்றி
என்றென்றும் ஆத்ம பசிக் கமுதே போற்றி
தெருளாதார்த் தெளிவிக்கும் சிவமே போற்றி
திசையனைத்தும் நிறைந்திலங்குந் திருவே போற்றி
அருளுருவே குருவடிவாய் ஆனாய் போற்றி
அருட்சோதி யோகமுனி அடிகள் போற்றி.

சிங்கப்பூர்ச் செல்வபதி காத்தோங் கூரில்
செண்பக விநாயகராங் கோவில் தன்னில்
மங்காத சோலையுடன் மலரக் கண்டு
மனமொடுங்கப் புலனொடுங்கக் கண்டேன் ஐயா
எங்கே நாம் அவர் பெருமை கூறக் கேட்போம்
எள்ளளவுங் குறையாத கீர்த்தி தன்னை
தங்கிடுமோர் இலுப்பை தரு நீழற் கண்ணே
இருந்தபடி இருந்தருள்செய் குருவே போற்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகர் என்றொரு மேதை

யோகர் என்றொரு மேதை - அவர்
யோசனை செய்த நற்பாதை
யாகம் அறிந்தவர் போற்றி - யாவரும்
துதித்திடும் பாதை

நல்லையிற் கண்டதோர் குருவால் - அவர்
நானிலக் காவலர் ஆனார்
அல்லல் வந்திடும் போது - அவர்
ஆவன செய்துமே காப்பார்

வள்ளல் முருகனின் அருளால் - அவர்
வாழ்வில் பெருமைகள் பெற்றார்
தெள்ளிய ஞானிகள் கூட்டம் - அவரைத்
தேடி வந்தனர் அனேகம்

செல்லப்பன் என்றோரு சீமான் - அவரை
தேடியே ஆட்கொண்டு சொன்னான்
எல்லாம் எப்பவோ முடிந்தது - என்றே
எல்லார்க்கும் சொல்லென்று சொன்னான்

வெண்மையின் வடிவமாய் வந்தே - மனதை
வெள்ளை வெளேரென்று ஆக்கி
கண்ணனின் பெருமைகள் பேசி - அவன்
கருணையை அடையுங்கள் என்றான்

தெள்ளத் தெளிந்த தமிழில் - அவரும்
தேடிய சிந்தனை ஆயிரம்
உள்ளத் திருந்திடும் வண்ணம் - அவரின்
யோசனையாய் அமைந்தது இன்று

அதனை ஆயிரம் ஆயிரம் - ஆண்டுகள்
ஆயினும் படித்தே மக்கள்
வேதனை தீர்த்துமே வாழ்வர் - மேலும்
வெற்றிகள் பெற்றே மீள்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மண்ணின் பெருமை - ஞானச்
செல்வரின் தோளின் அருமை
யாழ்ப்பாண மெங்கும் யோகர் - யாவரும்
போற்ற நடந்து சென்றாரே

ஞானப் பரம்பரை என்று - இந்நாளில்
நமக்கு வேண்டு மெப்போதும்
வானம் நில மெங்கும் - வானவூர்தி
வந்தே நம்மை அழிக்குது பாரு

மானைப் பழித்த கண்ணாள் - அந்த
மலைமகள் அருளும் வேண்டும்
தேனைப் போன்ற பாட்டினை - தினமும்
தேடிப் படித்திடல் வேண்டும்

செல்லப்பன் வழிவந்த - ஞானி
செப்பிய பொன்மொழி என்றும்
நல்லப்பன் முருகன் பேரால் - நம்மை
நாளும் காத்திட வேண்டும்

கல்லும் கசிந்தே உருக - சுவாமி
கக்கிய கவிதைக் கோவை
அல்லும் பகலும் படித்தே
ஆணவம் அற்றிட வாழ்வோம்

நல்லவர் போற்றிய நாதன் - நல்லை
நகரிற் கண்ட நம் நீதன்
எல்லவர் வாழ்விற்கும் காப்பு - இதனை
எத்தனை தரம் சொன்னலும் ஆப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

சீரொடுதாம் உறைந்தமனைக் குரிமை சேர்ந்த
திருநாவுக் கரசர்பணி தெரிவார் நிற்ப
பாரகத்தார் விண்ணகத்தார் பரவ வாய்த்த
பாதார விந்தங்கள் பதிந்து தோன்ற
தீரமிகும் அருள்நோக்கின் கருணைத் தெய்வம்
சிவயோக பிரானமர்ந்த திருக்கோ லத்தை
ஆரகத்தே பதித்துநிதம் அர்ச்சித் தாரோ
அவர்கண்டீர் பிறந்தபயன் அடைந்துள் ளாரே!

## தலம் தொழுது நலம் பெறவே கூடிடுவீரின்றே!

நல்லூரான் தேரடியில் ஞானநிதி தந்த
செல்லப்ப தேசிகனார் செவ்விதமை உந்த
சொல்லரிய சிவயோக மாமுனிவர் எந்தை
நல்லகொழும் புத்துறைக்கு நல்வரவு தந்தார்!

வழிகாட்டி மரமோநல் வரமருள்கற் பகமோ!
கொலுவமையுந் திருத்தலத்துக் குரியதொரு தருவோ!!
அலுப்பகற்று மோஆங்கோர் முச்சந்தி யதனில்
இலுப்பையெனும் மரத்தடியில் இருக்கைநிலை கொண்டார்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருந்த அருந்தவரின் மாண்புநிலை காண்பார்
வல்லிபுர உடையாரும் அவர் மனையா ளாய
முந்தையநல் வினைவிளங்கும் நாகவல்லி தானும்
மூப்பமைந்த உடையாரின் தங்கைதங்கம் மாவும்
நைந்துருகித் தம்வளவுள் இருந்த கடைக் கொட்டில்
நயந்ததனுள் இருந்திடுமா றடிபணிந்து கேட்ப
எந்தைபிரான் சிவயோகர் இசைந்தந்த நாளே
இறையவன்நம் கண்காண எழுந்தசுப தினமே!

தங்கம்மா சம்பந்த ராயசதி பதிகள்
தவமகனாய்ப் பெற்றெடுத்த திருநாவுக் கரசர்
பங்குடையாள் பரிமள ரத்தினத் தினோடு
தங்கமகன் திருஞான சம்பந்த ருடனே
மங்கை செந்திற் செல்வியுடன் திருமகளு மிணைந்து
அருட்குருவின் அடிபோற்றி ஆதரித்து வந்தார்!
சலங்கைமிகும் அடியரெலாம் வந்துதரி சிக்கும்
தலமாக நலமாகச் சிவயோகர் வைகும்
மங்களம்சேர் பதியாக மாறியவக் கொட்டில்
வையமுள்ள நாள்வரையும் வாழுமருள் பேசும்!!
பங்கயந்தாள் நடம்பயின்று அருளமுதம் பொழிந்த
தலம்தொழுது நலம்பெறவே கூடிடுவீரின்றே!!

தூய குருபரன் இணையடி போற்றி
மாயப் பிறப்பின் மயக்கறுப் போமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமிகள் சோதியுட் கலந்தமை

யாழ்ப்பாணத்தின் சோதியாக விளங்கிய யோகர் சுவாமிகள் 23.3.1964 திங்கட்கிழமை இரவு 3மணி 18நிமிடமள வில் சிவபதமடைந்தார். இச்செய்தி வானொலி மூலம் ஈழநாடு முழுவதும் தெரிவிக்கப்பட்டவுடன் ஈழநாட்டின் பல பாகங்களி லுமுள்ள அடியார்கள் ஏராளமானவர்கள் வந்து சேர்ந்தனர். 24.3.1964 செவ்வாய்க்கிழமை முழுமையும் அடியார்களும் வித்தியாசாலை மாணவ மாணவிகளும் பிறரும் கொழும்புத் துறை ஆச்சிரமத்தில் வைக்கப்பட்டிருந்த சுவாமிகளின் பூதவுடலைத் தரிசித்து அஞ்சலி செலுத்தினார்கள். பக்தர்கள் கூட்டங் கூட்டமாகத் திருமுறைகள் மற்றும் தமிழ்த் தோத்திரங்கள், நற்சிந்தனைப் பாடல்களை மனங்கசிந்துருக இசையுடன் ஓதினார்கள். 25.3.1964 புதன்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் சுவாமிகளுடைய பூதவுடலுக்குப் பத்தி சிரத்தையுடன் அபிடேகஞ் செய்யப்பட்டது.

அவருடைய பூதவுடல் தூய வெண்துகிலினாலும் பூமாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டபின், பூமாலைகளால் அலங்கரிக்கப்பட்ட சதுரவடிவமான தொட்டிலில் வைத்துக் கொழும்புத்துறை வீதிவழியாகத் துண்டிச் சுடலைக்கு அடி யார்கள் சுமந்து சென்றார்கள். சுவாமிகளுடைய ஆச்சிரமத்தி லிருந்து சுடலை வரையுள்ள பாதை இரு பக்கமும் மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பூதவுடல் சென்ற மார்க்கத்தில் வசிக்கும் மக்கள் வீட்டு வாயில்கள் தோறும் குத்துவிளக்குகள், நிறைகுடம் வைத்துப் பூமாரி பொழிந்து சுவாமிகளுக்குத் தங்கள் அன்பையும் வணக்கத்தையும் செலுத்தினார்கள். பூதவுடல் ஊர்வலம் வந்தபோது பஜனைக் கோஷ்டியினர் பக்திப் பாடல்கள் ஓதினார்கள்

முற்பகல் 9.00 மணியளவில் பூதவுடல் மயானத்தை அடைந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் - ஆண்களும் பெண்களும் சிறுவர்களுமாகத் தகனக் கிரியையைப் பார்ப்பதற்காக கூடினார்கள். தொண்டர்கள் அவர்களை பெண்கள் வேறாகவும் ஆண்கள் வேறாகவும் உட்காரச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார்கள். எங்கும் அமைதி நிலவியது. பூதவுடல் பூந்தொட்டிலிலிருந்து விறகுகளினாலும் கால் அந்தருக்கு மேற்பட்ட சந்தனக் கட்டைகளாலும் அமைக்கப்பட்ட சிதை யின்மீது வைக்கப்பட்டது. யாவரும் யோகசுவாமிகளின் அருளைத் தியானஞ் செய்துகொண்டிருந்தார்கள். அடியார்கள் திருவாசகப் பாக்கள் சிலவற்றையும் ஒரு புராணத்தையும் உருக்கமாக ஓதிய பின்பு ஈம நெருப்பு திருநாவுக்கரசு அவர் களால் மூட்டப்பட்டது. யாவரும் அரகராவென்று கோஷ மிட்டுச் சோதியை வழிபட்டனர்.

இவ்வைபவத்தைப் பார்வையிட்டுச் சுவாமிகளுக்குத் தங்கள் அஞ்சலியைச் செலுத்துவதற்காகச் சிங்களச் சகோதரர்களும், இஸ்லாம் மதத்தவர்களும், கிறீஸ்தவர்களும் சமுகமாயிருந்தார்கள்.

இங்ஙனம் எல்லாரும் சுவாமிகள் சோதியுட்கலந்த வைபவத்தைத் தரிசித்தார்கள். இந்நிகழ்ச்சிகளையெல்லாம் கண்ணுற்றபொழுது அந்த இடம் பூலோக கைலாயமாகத் தோற்றமளித்தது.


"நான் ஐம்பது வருடத்துக்கு மேலாகச் செய்ய வேண்டியவற்றை எல்லாம் செய்துவிட்டேன். போதிக்க வேண்டியவற்றைப் போதித்து விட்டேன். ஒரு குறையும் விடவில்லை" என உருக்கமாகச் சுவாமிகள் கூறியுள்ளார்கள்.


ஆகவே சுவாமிகள் அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலமாக நமக்குக் காட்டிய வழியைப் பின்பற்றி உய்தியடை-வோமாக.

ஒரு பொல்லாப்புமில்லை.
எப்பவோ முடிந்த காரியம்.
நாமறியோம்.
முழுதும் உண்மை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயோகி பல காலம் வாழ்ந்த பொன் வீடு!
மகிமை ஞானம் பொங்கிய பொலிந்த நன் வீடு!







சுவாமிகள் சுகவீனமாக இருந்தபோது அவருக்கு உதவிய வாகனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடாது ஆதவன் ஆக்ரோஷம் அதிகமானாலும்
விடாது ஆன்மீக ஜோதியின் அறம் தொடரும்!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆத்ம

அவதாரமே!

அதிசயச்

சுடரே!


ஆண்டவன்

அடியில்

நின்

அஸ்திக்

கலசமே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமிகளை ஆதரித்துப் பேணிய குடும்பம்




1. தங்கம்மா
2. வல்லிபுரம்
3. நாகவல்லி
4. திருநாவுக்கரசு
5. பரிமளரத்தினம்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமிகள் திருவடி தொழுவோம்!

ஞானநிலை பேசுகின்ற கூர்ந்த கண்கள்!
நற்றவத்தோர் உருக்காட்டும் வளர்ந்த தாடி!
மோனநலம் விழைகின்ற தூய சிந்தை!
முப்பொழுதும் இறைநாமம் சொல்லும் நாவால்
ஆனதொடு ஆகுசெயல் தெளித்து தன்முன்
அடிவீழ்ந்தோர்க் குரைக்கின்ற ஆற்றல் கொண்டே
வானவர்போல் மண்மீதில் நம்கா லத்தே
வாழ்ந்தமுனி திருவடிகள் தொழுவோம் வாரீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின் இணைப்பு

# நற்சிந்தனை

என்னும் நூலில் இருந்து

எங்கள் குருபரன்

## சிவயோக சுவாமிகள்

அருளிய

## திருப்பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர் நாங்களே

இராகம் - மாயாமாளவகௌளை    தாளம் - திஸ்ர ஏகம்

பல்லவி

தொண்டர் நாங்களே - சிவ
தொண்டர் நாங்களே

அனுபல்லவி

அண்டத்திற் பிண்டத்தில்
ஆண்டவனைக் காணும்    (தொண்)

சரணம்

மண்டு பிணியால் வருந்த மாட்டோம்
மாதாக் கருப்பையின் மீண்டு வாராத்    (தொண்)

பண்டுசெய் வினையெல்லாம் பறந்து போச்சு
பாரி லனைத்தும் உறவே யாச்சு    (தொண்)

கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்கு
என்று மாளாகி எப்போதும் வாழும்    (தொண்)

வேதாந்த சித்தாந்தம் வேறாகக் காணோம்
வீட்டு நெறியினில் நாட்டம் மிகவுள்ள    (தொண்)

சிவசிவ வென்றெந்த வேளையுஞ் சொல்லிச்
சீவன் சிவனென்று சித்தத்திற் கொள்ளும் (தொண்)

இருந்த இடத்தினில் எல்லாம் பார்ப்போம்
பொருந்திய வண்ணம் பூமியில் வாழும்    (தொண்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வம் எல்லோர் சித்தத்தினு முண்டு

தெய்வம் எல்லோர் சித்தத்தினு முண்டு
உய்யும் மார்க்கம் உணர்ந்தோர்க் குண்டு
பொய்யும் பொறாமையும் புன்மையோர்க் குண்டு
ஐயன் அடியிணை அன்பர்க் குண்டே.

கல்லா தார்பாற் கபட முண்டு
எல்லா ரிடத்து மீச னுண்டு
வில்லா ரிடத்தில் வீத்தொழில் உண்டு
எல்லாச் சக்தியும் இறைபால் உண்டே.

தேடுவார் மாட்டுச் செல்வம் உண்டு
தேடுவார் மாட்டுத் தெய்வம் உண்டு
நாடுவார் மாட்டு நன்மை உண்டு
பாடுவார் மாட்டுப் பரமன் உண்டே.

சீவன் சிவனெனல் தேறினார்க் குண்டு
ஆவதும் அழிவதும் அசடர்க் குண்டு
ஈவது விலக்கார்க் கெல்லா முண்டு
தேவ தேவன் திருவடி உண்டே.

அன்பு சிவமெனல் அறிஞர்க் குண்டு
பொன்புரை மேனி புனிதர்க் குண்டு
தன்போற் பிறரெனல் தக்கோர்க் குண்டு
விண்போல் விரிவு மேலோர்க் குண்டே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்குருபர புங்கவ சிங்கமே

### கட்டளைக் கலிப்பா

தன்னைத் தன்னால் அறிந்திட வேண்டுமே
தானா யெங்குஞ் செறிந்திட வேண்டுமே
பொன்னை மாதரைப் போக்கிட வேண்டுமே
புவியி லாசையை நீக்கிட வேண்டுமே
கண்ணைப் போலறங் காத்திட வேண்டுமே
கமல பாதந் தொழுதிட வேண்டுமே
எண்ணம் யாவு மிறந்திட வேண்டுமே
என்கு ரபர! புங்கவ சிங்கமே!

கசடு தீர்த்தறங் கற்றிட வேண்டுமே
கல்வி யாற்பயன் பெற்றிட வேண்டுமே
அசடர் நட்பை அகற்றிட வேண்டுமே
அந்தி சந்தி அடிதொழ வேண்டுமே
நிசசொ ரூபம றிந்திட வேண்டுமே
நீங்கா தென்று மிருந்திட வேண்டுமே
அசலு னக்கிலை யென்ற குரபர!
ஆண்மை விஞ்சிடும் அற்புதச் சிங்கமே!

மூன்று மொன்றாய் முடிந்தி வேண்டுமே
முனையின் வாசல் திறந்திட வேண்டுமே
ஊன்று பாதத் துறங்கிட வேண்டுமே
உள்ளே யானந்தம் பொங்கிட வேண்டுமே
தூண்டு சோதி விழுங்கிட வேண்டுமே
தூய நிர்க்குண அற்புத பொற்பதம்
ஈண்டு தந்த இனிய குருபர!
என்னை யாண்டவ! இங்கித சிங்கமே!

இருளை நீக்கி இருந்திட வேண்டுமே
எங்குந் தெய்வத்தைக் கண்டிட வேண்டுமே
பொருள றிந்தினிப் போற்றிட வேண்டுமே
பொய்ய ழுக்கா றகற்றிட வேண்டுமே
மருளைத் தந்து மயக்கும் பொருள்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றி யேயரு ளாக்கிட வேண்டுமே
பெருமை யிற்பிறர் பேசுங் குருபர!
பெத்த னென்னையும் பேணிய சிங்கமே!

அஞ்சும் மூன்றும் அறிந்திட வேண்டுமே
ஆண வத்தை ஒழித்திடல் வேண்டுமே
இஞ்சி சூழும் இலங்கையி லிராவணன்
ஏத்திப் போற்றி இசைத்த முதல்வனே
நஞ்சு கண்டத்திற் கொண்டவ நம்பனே
நம்மை யாளுவான் நண்ணும் முத்வனே
பஞ்சின் மெல்லடிப் பரம குருபர
பாவி யேனையு மாட்கொண்ட சிங்கமே!

## சர்வம் பிரம மயம்

இராகம் - கமாசு தாளம் - ஆதி

**பல்லவி**

சாந்தம் உபசாந்தம்
சர்வம் பிரம மயம் (சாந்)

**சரணம்**

சாந்த னையும் மாந்த ரன்பு
கூர்ந் திதனைக் கூறு வீர் (சாந்)

சார்ந்த இட மெங்குஞ் சிவசிவ
தங்கும் பரிமளம் பொங்குஞ் சிவ (சாந்)

தாம் தமிதிமி தரிகிட கிடசெம்
நாம் அதுவென அறிவது கவசம் (சாந்)

தொதிந்தத் தாதாதா தரிகிட
ஏனிந்தப் பாடெங்குஞ் சிவசிவ (சாந்)

அண்ட பிண்டமெங்கும் அதுவெனக்
கண்டுதொண்டு செய்வது தகுதி (சாந்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏத்துக பொன்னடி

நிலை மண்டில ஆசிரியப்பா

எழுக புலருமுன் ஏத்துக பொன்னடி
தொழுது வணங்குக தூநீ றணிக
பழதிலைந் தெழுத்தும் பன்னுக பன்முறை
அழுது புலம்புக வாய்விட் டரற்றுக
அன்னை பிதாவின் அடியிணை வணங்குக
தன்னைப் போலச் சகலமும் ஓம்புக
விண்ணைப் போல வியாபகம் ஆகுக
கண்ணைப் போலக் காக்க அறத்தை
செய்வன எல்லாஞ் செவ்வனே செய்க
கையும் மெய்யும் கருத்திற் கிசைக
அழுக்காறு கோபம் அவாஅ ஒழிக்க
விழுப்பம் மிக்க மேன்மக்க டம்மை
ஒருபோதும் மறவா துறவு கொள்ளுக
கருவினில் வாராக் காரணங் காண்க
தன்னை அறிக தானே ஆகுக
மின்னை ஒத்த வாழ்வை வெறுக்க
வறுமை வந்துழி மனந்தள ரற்க
மறுமை இன்பம் மறவாது நாடுக
அடியார் தங்கள் அடியிணை மலர்க்கீழ்
குடியாய் வாழுக குறைவெலாந் தீர்க
ஈசன் அடியிணை ஏத்தி ஏத்தி
வாச மலர்கொடு வாழ்த்தி வாழ்த்தி
மத்தன் இவனென மண்ணவர் பேசவும்
சித்தன் இவனெனத் தேவர்கொண் டாடவும்
இவ்வண்ணம்
ஒத்தன ஒத்தன ஊரவர் பேசிடச்
சித்தந் தெளிந்து சிவாய நமவென
நின்று மிருந்துங் கிடந்தும் நினைந்து
பொன்றும் உடலைப் போற்றுதல் ஒழிந்து
நன்மை தீமை நாடா தொருவி
அன்னை போல அன்பிற் சிறந்து
பின்னை ஒன்றும் பேசா தடங்கி
என்றும் வாழ்ந்தினி திருத்தல் இன்பமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னை அறிந்தால் தவம் வேறில்லை

தன்னை அறிந்தால் தவம்வே றில்லைத்
தன்னை அறிந்தால் தான்வே றில்லைத்
தன்னை அறியச் சகலமு மில்லைத்
தன்னை அறிந்தவர் தாபத ராமே

பொன்னை யன்றிப் பொற்பணி யில்லை
என்னை யன்றி ஈசன்வே றில்லைத்
தன்னை யன்றிச் சகம்வே றில்லைத்
தன்னை அறிந்தவர் தத்துவா தீதரே

ஆதியும் இல்லை அந்தமும் இல்லை
நீதியும் இல்லை நெறியும் இல்லை
சாதியும் இல்லைச் சமயமும் இல்லை
ஓதி உணர்ந்தவர் உறுதி மொழியே

நன்மையுந் தீமையும் நங்கட் கில்லைத்
தொன்மையும் புதுமையும் தூயோர்க் கில்லை
அன்னையுந் தந்தையும் ஆன்மாவுக் கில்லைச்
சொன்ன சுருதியின் துணிபிது வாமே

காலமு மில்லைக் கட்டு மில்லை
மூலமு மில்லை முடிபு மில்லை
ஞாலமு மில்லை நமனு மில்லைச்
சால அறிந்த தவத்தி னோர்க்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்பம் முப்பது

வேத சாத்திரங் கற்றிடல் இன்பமே
வீணர் நட்பினை விட்டிடல் இன்பமே
மாதம் மும்மழை பெய்திடல் இன்பமே
மாத ராசையை நீக்கிடல் இன்பமே
நாதன் நாமத்தை ஓதுதல் இன்பமே
நாம்சி வமென நாடுதல் இன்பமே
பேதம் யாவையும் நீங்கு பெரியவ
பெருமை சேர்குரு புங்கவ சிங்கமே!

எங்கும் ஈசனைக் காணுதல் இன்பமே
ஏதி லார்பால் இரங்குதல் இன்பமே
பொங்கு கோபத்தைப் போக்குதல் இன்பமே
புவியின் ஆசையை நீக்குதல் இன்பமே
தங்கும் யோகத் தமருதல் இன்பமே
தானே தானாய்த் தழைத்திடல் இன்பமே
இங்கெ னக்கின்பம் எளிதில் விளக்கிய
என்கு ருபர புங்கவ சிங்கமே!

அஞ்செ ழுத்தினை யோதுதல் இன்பமே
அறிவால் அஞ்சையும் வென்றிடல் இன்பமே
நெஞ்சில் வஞ்சகம் நீங்குதல் இன்பமே
நியம நிட்டைகள் ஆற்றுதல் இன்பமே
தஞ்ச மென்றடி சாருதல் இன்பமே
தன்னைப் போற்பிறர் பாலன்பில் இன்பமே
அஞ்சல் அஞ்சலென் றருளிய ஐயனே
ஆண்மை சேர்குரு புங்கவ சிங்கமே!

ஒன்றி லொன்றி யிருந்திடல் இன்பமே
ஓம்சி வாய நமவெனல் இன்பமே
என்றும் வாழக் கருதுதல் இன்பமே
எல்லாம் ஈசன் செயலெனல் இன்பமே
நன்று தீதை யகற்றுதல் இன்பமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லோர் பாதத்தை நண்ணுதல் இன்பமே
ஒன்றும் நீயலை யென்றெனக் கோதிய
உண்மை சேர்குரு புங்கவ சிங்கமே

சுழிமு னைக்குள் ஒடுங்குதல் இன்பமே
சோதி ரூபத்தைக் காணுதல் இன்பமே
பழியும் பாவமும் நீக்குதல் இன்பமே
பதியி லேயிளைப் பாறுதல் இன்பமே
வெளியி லேயொளி காணுதல் இன்பமே
விண்ணைப் போல விளங்குதல் இன்பமே
ஒழிக உன்பவம் என்ன உரைத்திட்ட
ஒருமை சேர்குரு புங்கவ சிங்கமே!

## இன்ப துன்பம் இவையே மாயை

நேரிசை ஆசிரியப்பா

இன்ப துன்பம் இவையே மாயை
அன்புசேர் ஆன்மா அறிவே வடிவம்
ஆதலால் நின்னை அவையோ தீண்டா
கானல்நீ ரானிலங் கரைவது முண்டுகொல்
ஞான சற்குரு நற்றிருப் பாதம்
ஆன மட்டும் அகங்குழைந் துருகிப்
போன காரியம் புந்தியில் நினையா
திடைவி டாதுநின் றேத்திப் போற்றி
மடையினீர் பெருகி வழிவது போல
இடையறா தினிய ஏகாந்த னாகிச்
சங்கற்ப விகற்பந் தவிர்ந்திடு சமாதியிற்
பொங்கிடும் அமிழ்த போனக மருந்தி
இருந்தாங் கினிதே இருந்து
திருந்திய விதேக முத்திசேர் குவமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தைக் கண்டிடர் தீர்வது வீரமே

கலிவிருத்தம்

சிவத்தைக் கண்டிடர் தீர்வது வீரமே
பாவத்தை நீக்கிப் பணிவது வீரமே
தவத்தைச் செய்து சலிப்பறல் வீரமே
உவத்தல் காய்தல் ஒறுத்திடல் வீரமே

பொறுமை யைப்புறங் காப்பது வீரமே
வறுமை வந்தால் மகிழ்வது வீரமே
சிறுமை நீக்கிச் சிறந்திடல் வீரமே
மறுமை இன்பத்தை நாடுதல் வீரமே

ஐம்பொ றியைய டக்கிடல் வீரமே
வெம்ப கையை விடுவது வீரமே
நம்பன் பாதத்தை நண்ணுதல் வீரமே
தம்மைத் தம்மால் அறிவது வீரமே

கண்ணைப் போலறங் காப்பது வீரமே
மண்ணைப் பெண்ணை மறப்பது வீரமே
விண்ணைப் போல விளங்குதல் வீரமே
எண்ணம் யாவும் இறப்பது வீரமே

ஓதி யோதி யுணர்வது வீரமே
சாதி பேதந் தவிர்வது வீரமே
நீதி நூல்வழி நிற்பது வீரமே
ஆதி பாதம் அணைவது வீரமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் அவன் செயலே கிளியே

கண்ணிகள்

சொல்லால்வருங் குற்றமெல்லாம்
நல்லோர் பொறுத்திடுவார்
எல்லாம் அவன்செயலே - கிளியே!
ஏத்திப் பணிவோமே

எல்லாஞ் சிவன்செயலே
எப்படியா யிருந்தாலும்
நல்ல மலரெடுத்துக் - கிளியே!
நாமேத்திப் பணிவோமே

போக்குவர வில்லாத
பொன்னடியை யெப்பொழுதும்
வாக்காலும் மனத்தாலுங் - கிளியே!
வாழ்த்தி வணங்குவோமே

காயம் அழிந்துவிடும்
காண்பனவும் ஒழிந்துவிடும்
மாயமான வாழ்வைவிட்டுக் - கிளியே!
மலரடியைப் பணிவோமே

ஆன்மா அழியாப்பொருள்
அப்பொருளை அறிந்துவிட்டால்
வீண்பாவ னையெல்லாம் - கிளியே!
வெந்துநீ றாய்விடுமே

பொறிவழியே போயலையும்
பொல்லாம னத்தைவென்றால்
அறிவறி யாமைவிட்டுக் - கிளியே!
அரன்பதம் சேர்ந்திடலாம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வந்த வல்வினை மாளுஞ் சிவாயவே

கலிவிருத்தம்

அந்தம் ஆதியும் இல்லான் அடியரை
எந்த நேரமும் நீங்கா இறையவன்
கந்த மாமலர்ப் பாதத்தைக் கைதொழ
வந்த வல்வினை மாளுஞ் சிவாயவே

ஆடு பாம்பணிந் தம்பலத் தாடுவான்
பாடு வார்பவந் தீர்க்கும் பராபரன்
தேடு வார்தங்கள் சித்தத் திருந்திடும்
பாடு நீங்கிடும் பற்று சிவாயவே

இளமை மூப்பிலான் எம்மிறை எம்பிரான்
களவு செய்யுங் கருமிகள் தங்கட்கும்
அளவி லாவரு ளீயு மளியினான்
உளம்பொ ருந்தி யிருக்குஞ் சிவாயவே

ஈர வார்சடை எந்தை யெமக்கெலாம்
பேர ருள்செயும் பெற்றியன் பேயுடன்
ஆர வாரமாய் ஆடுவன் காட்டினில்
நேர தாயென்மு னிற்குஞ் சிவாயவே

உலகம் யாவையுந் தந்திடு முத்தமன்
அலகி லாவிளை யாட்டயர் தத்துவன்
பலக லையெலாம் பாலிக்கும் வித்தகன்
சிலக ணமேனும் பிரியான் சிவாயவே

ஊன்பொ திந்த உடலு முயிரவன்
நான்ப டும்பாடு நன்றா யறிபவன்
மான்ப டுங்கையன் மாமலர்ச் சோதியான்
தான்வ திந்தானென் சித்தஞ் சிவாயவே

எள்ளு மெண்ணெயும் போன்ற இறையவன்
கள்ளு லாவுங் கடிமலர்க் கொன்றையான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளு வார்தங்கள் உள்ளத்தி லுள்ளவன்
நள்ளு வார்தமை நாடுஞ் சிவாயவே

ஏழை பங்கன் எருதில் வருபவன்
தாளை நம்பித் தவஞ்செய்யுந் தாபதர்
நாளை இன்றென நாடி நலிகிலர்
ஏழை யேனெனை யாளுஞ் சிவாயவே

ஐய மில்லா அருந்தவர் நெஞ்சில்வாழ்
தெய்வ மென்னுடைச் சித்தத்தி லும்முளன்
உய்வ முய்வ மொருகுறை யும்மிலை
வைய மெங்கும் வணங்குஞ் சிவாயவே

ஒருவ னாலே உலகம் உதித்ததே
ஒருவ னாலே உலகம் நிலைத்ததே
ஒருவ னாலே உலகம் ஒடுங்கிற்றே
ஒருவ னேயென் னுறுதி சிவாயவே

ஓங்கா ரத்தி லுதித்த துலகெலாம்
ஓங்கா ரத்தில் நிலைத்த துலகெலாம்
ஓங்கா ரத்தி லொடுங்கு முலகெலாம்
ஓங்கா ரத்தி லுறுதி சிவாயவே!

## வேண்டில் வேண்டாமை வேண்டிட வேண்டுமே

கட்டளைக் கலிப்பா

வேண்டில் வேண்டாமை வேண்டிட வேண்டுமே
மிக்க அன்பருள் வாழ்ந்திட வேண்டுமே
மாண்டு மாண்டு பிறந்திட நேரினும்
மாத வமனம் மற்றொரு பற்றின்றி
ஊன்று பாதத் துறங்கிட வேண்டுமே
ஓம்சி வாய நமவென வேண்டுமே
ஈண்டெ னக்கொரு சொல்லா லுணர்த்திய
என்கு ருபர புங்கவ சிங்கமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணி னாசை மறந்திட வேண்டுமே
மதியி லேரவி சேர்ந்திட வேண்டுமே
விண்ணி னோசை விளங்கிட வேண்டுமே
வேறொன் றின்றித் துலங்கிட வேண்டுமே
பண்ணும் ஓசையும் போன்ற பரமனைப்
பாடி யாடிப் பணிந்திட வேண்டுமே
என்னு ளேயருள் காட்டிய அண்ணலே
என்கு ருபர புங்கவ சிங்கமே!

நரியை நற்பரி யாக்கிட வேண்டுமே
நானும் நீயுமொன் றாகிட வேண்டுமே
திரிபு ரத்தை யெரித்திட வேண்டுமே
தேவ தேவனைக் கண்டிட வேண்டுமே
பெரியா தம்பணி பேணிட வேண்டுமே
பிறவி யின்பயன் பெற்றிட வேண்டுமே
வறிய னேனையும் வாழ்வித்த அண்ணலே
வாழ்கு ருபர புங்கவ சிங்கமே!

வெளியி லெயொளி கண்டிட வேண்டுமே
வீணர் தங்களை விட்டிட வேண்டுமே
சுழியி லேயிருந் தாறிட வேண்டுமே
துரிய வீட்டி லிருந்திட வேண்டுமே
களிகொள் யானையைக் கட்டிட வேண்டுமே
கார ணத்தை யறிந்திட வேண்டுமே
தெளிய வேயருள் காட்டிய தெய்வமே
தேவர் போற்றுங் குருபர சிங்கமே!

காலைக் கட்டித் தவஞ்செய்ய வேண்டுமே
காமன் றன்னை யெரித்திட வேண்டுமே
மேலை வாசல் திறந்திட வேண்டுமே
வெளியி லேநடங் கண்டிட வேண்டுமே
மூல மந்திர மோதிட வேண்டுமே
முத்தி சேர விரும்பிட வேண்டுமே
ஞால மெங்கும் புகழ்ந்திடு தெய்வமே
நற்கு ருபர புங்கவ சிங்கமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேறித் தேறித் தெளிவதுந் தன்னையே

ஓதி யோதி யுணர்வதுந் தன்னையே
நீதி பேசி நினைவதுந் தன்னையே
சாதி பேசிச் சலிப்பதுந் தன்னையே
ஆதி யாதியென் றாய்வதுந் தன்னையே

ஆறி யாறி அறிவதுந் தன்னையே
தேறித் தேறித் தெளிவதுந் தன்னையே
மாறி மாறி நினைவதுந் தன்னையே
கூறிக் கூறிக் குறிப்பதுந் தன்னையே

சிவத்தை நோக்கித் தெளிவதுந் தன்னையே
பவத்தை நீக்கிப் பணிவதுந் தன்னையே
தவத்தை யாற்றி யறிவதுந் தன்னையே
உவத்தல் காய்த லொளிப்பதுந் தன்னையே

வாதம் பேசி மதிப்பதுந் தன்னையே
காத மோடியுங் காண்பதுந் தன்னையே
பூத மைந்தனுட் போற்றலும் தன்னையே
நாதம் விந்தென நவில்வதும் தன்னையே

ஓடி யோடி உவப்பதுந் தன்னையே
தேடித் தேடித் தெளிவதுந் தன்னையே
நாடி நாடி நகைப்பதுந் தன்னையே
கூடிக் கூடிக் குறிப்பதுந் தன்னையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சொல்லா லுளந்தூய்மை யாச்சே

ஆனந்தக் களிப்பு

தானா தனா தந்தனான - தனதன
தானா தனா தந்தனான தந்தனான

ஒருசொல்லா லுளந்தூய்மை யாச்சே - சிவசிவ
ஒன்றிரண் டென்றிடும் பேதமும் போச்சே
இருவினை என்பதும் பேச்சே
என்னை அறிந்தேன் இடரற்றுப் போச்சே

எல்லாமென் கைவச மாச்சே - சிவசிவ
எடுத்த பிறப்பின் பயன்சித்தி யாச்சே
உல்லாச மாய்த்திரிவ தாச்சே
உலகெலா மெனக்குற வாகிப் போச்சே

சொல்லாலே வாய்த்த சுகத்தை - சிவசிவ
சுகிப்பதே அல்லாமற் சொல்லவொண் ணாதே
கல்லாதே யாவுங்கற் றேனே
காயத்தையும் என்றன் கைக்குள் வைத்தேனே

அண்ட சராசர மெல்லாம் - சிவசிவ
அகத்திலே கண்டு தரிசித்துக் கொண்டேன்
முண்டக மலர்ப்பாதங் கண்டேன்
மூவருந் தேவரும் முளைத்ததுங் கண்டேன்

உருகி உருகி உணர்ந்தேன் - சிவசிவ
ஒன்றையுங் காணாம லேங்கிநான் நின்றேன்
மரும மிதுபெரும் மருமம்
மகத்துக்க ளாலும் சொல்லொணா மருமம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தியானம் செய்திடுவோம்

அன்னைபி தாக்குருவாய்
ஐயனெனை யாண்டுகொண்டான்
என்னைய றிந்தேனெடி - கிளியே
இச்சையெல்லாம் போச்சுதெடி
இளங்குயிலே நடந்துவாடி
எல்லாஞ்சிவ ரூபமெடி
அளந்தறிய முடியாதெடி
தளர்ந்திடாமல் தொடர்ந்துவாடி
தானதாம் தானதாம்
தானதாம் தானதாம்

பொன்னாசை பெண்ணாசை
மண்ணாசையால் மனிதரெல்லாம்
சின்னாபின்ன மானாரெடி - கிளியே
சிவத்தியானம் செய்திடுவோம்
சிங்காரமான பூங்குயிலே
அங்குமிங்கு மலையாதே
கங்குல்பக லற்றகாட்சி
காட்டிவைப்பேன் கண்ணேவாராய்
எங்குமவனெடி எங்குமவனெடி
எல்லாமவனெடி எல்லாமவனெடி

விண்ணாணம் பேசியன்றோ
வீண்காலம் போக்குகின்றோம்
பொன்னான மேனியரைக் - கிளியே
பூவெடுத்துப் பூசைசெய்வோம்
பூவையேநீ புகலக்கேளாய்
சேவைசெய்தவர் சீவன்முத்தர்
நாவைநீ காத்துக்கொள்ளெடி
நானெனுமாணவம் நீக்கிக்கொள்ளடி
நாமதுவெடி நாமதுவெடி
நாமதுவெடி நாமதுவெடி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருபதத்தைக் கும்பிடுவோம்

காலை யெழுந்திருந்து கைகால் முகங்கழுவி
கோல மலரெடுத்துக் - கிளியே!
குருபதத்தைக் கும்பிடுவோம்
கோபக்ரோத மோகமாகிய கூடாதகூட்டங் கூடாதே
நாடாதேயென்றுந் தேடாதே
நாமதுவெடி நாமதுவெடி

பொறிவழியே போயலையும் பொல்லாம னத்தைவென்றால்
அறிவறி யாமையெல்லாம் - கிளியே!
அப்பொழுதே மாய்ந்துவிடும்
அஞ்சாதேநீ கெஞ்சாதே அங்குமிங்கு மோடாதே
எங்கும்நாமெடி எங்கும்நாமெடி
எல்லாம்நாமெடி எல்லாம்நாமெடி

தன்னை யறிந்துவிட்டால் தானந் தவமதுவே
தனக்குவமை யில்லையடி - கிளியே!
தாளிரண்டும் பூட்டிவிடு
தங்கமேநீ இங்கேவா எங்குமவன் சங்கையிலை
தானதாம் தானதாம்
தனதாம் தனதாம்!

## நல்லைக் குருமணியே போற்றி

அறுசீரடியாசிரிய விருத்தம்

அன்பு நெறியு மருணெறியு மறியாதேனை நயந்து வந்தே
இன்ப நெறியிற் புகுத்திவிட்ட எந்தாய் நல்லைப் பதிக்கரசே
துன்ப மறியேன் சுகமறியேன் தொல்லை வினையும் யானறியேன்
முன்பு மறியேன் பின்பறியேன் முழுது முண்மை யெனுமுனியே

முனியே முனிவர் முழுமுதலே மூர்க்கனேனை ஆண்டு கொண்ட
தனியே தன்னொப்பா ரில்லாத் தலைவா சகமீ ரேழுக்கும்
இனியாய் என்னை நிங்கா இறைவா நல்லைக் குருமணியே
புனிதா போற்றி புண்ணியர்கள் நண்ணும் பொருளே போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டோர்க்குங் குறையுண்டோ

எண்சீரடியாசிரிய விருத்தம்

போற்றியொரு பொல்லாப்பு மில்லை யென்ற
பூங்கழல்க ளவைபோற்றி புவியுள் ளோர்கள்
ஏற்றுகின்ற திருவடிக ளென்றும் போற்றி
எளியேனை யாண்டுகொண்ட கருணை போற்றி
சாற்றரிய மலர்ச்சோலை தயங்கு கின்ற
தண்புனல்சேர் நல்லூரிற் குருவாய் வந்து
வீற்றிருந்தென் வினைதீர்த்த விமலா வுன்னை
வேறாக எண்ணுதற்கு விதியு முண்டோ

உண்டோதா னுனைப்போல ஒருவ ரிந்த
உலகத்தில் உறுதிதந்தோ ருணர்ந்து பார்க்கில்
எண்டோள னாவாய்நீ என்னை யுன்னை
எவர்பிரித்துச் சொல்லவல்லார் எந்தாய்! எந்தாய்!
வண்டோதை குறையாத வளஞ்சேர் நல்லைக்
குருமணியே! மவுனத்தின் வைப்பே! யுன்னைக்
கண்டோர்க்குங் குறையுண்டோ கலந்து கொண்டேன்
கள்ளுண்ட வண்டுபோ லாயி னேனே.

ஆயுநான் மறைதேடி யறியா வுன்னை
யாரறிவா ரரும்பொன்னே மணியே முத்தே
மாயவுட லுண்மையென மதித்து வாடி
மயங்காம லடியேனை நல்லூர் தன்னில்
தோயுமருட் குருவாகிச் சொரூபங் காட்டிச்
சுகம்பெறவே யிருத்தி வைத்தா யினியெனக்கு
வாயுமுண்டோ வணங்குதற்கு வழிவே றுண்டோ
வள்ளலே யுள்ளதைநீ வழுத்து வாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் வளநாடு

அன்பர் பணிந் தேத்திநிற்கும் நாடெங்கள் நாடே
அரனுறைதற் கிடமான நாடெங்கள் நாடே
துன்பங்களை போக்கிநிற்கும் நாடெங்கள் நாடே
தூயவருள் மழைபொழியும் நாடெங்கள் நாடே
இன்பப்பயிர் ஓங்கிவளர் நாடெங்கள் நாடே
இந்திரியக் கள்வரற்ற நாடெங்கள் நாடே
என்புநனி நெக்குருக என்னைவலிந் தாண்ட
என்குரவன் காட்டிவைத்த தெங்கள்வள நாடே

ஆதியந்த மில்லாத நாடெங்கள் நாடே
அம்பரம்போ லேநிறைந்த நாடெங்கள் நாடே
தீதிலருட் கடல்சூழ்ந்த நாடெங்கள் நாடே
திக்கெட்டும் பெருகிவளர் நாடெங்கள் நாடே
சோதிமய மானவுயர் நாடெங்கள் நாடே
சுருதியெல்லாம் ஓலமிடும் நாடெங்கள் நாடே
ஓதாம லோதுவித்த உயிர்க்குயிராம் நாதன்
ஓண்கழல்கள் காட்டிவைத்த தெங்கள் வளநாடே

கட்டுநமன் கிட்டரிய நாடெங்கள் நாடே
கன்றுமன வெப்பொழிக்கும் நாடெங்கள் நாடே
வெட்டவெளி யாறோடும் நாடெங்கள் நாடே
மீதான வெற்புடைய நாடெங்கள் நாடே
பட்டப்பகல் போலொளிரும் நாடெங்கள் நாடே
பகலிரவு தோன்றாத நாடெங்கள் நாடே
மட்டுப்படா மயக்கமெலாந் தீரவெனை ஆண்டான்
மலர்ப்பாதங் காட்டிவைத்த தெங்கள்வள நாடே

வெய்யபுவிப் பார்வையொழி நாடெங்கள் நாடே
மேலான பூரணமாம் நாடெங்கள் நாடே
துய்யவறி துயில்புரியு நாடெங்கள் நாடே
தூயசுக வாரிதிதோய் நாடெங்கள் நாடே
செய்யநடங் கண்டுகளி நாடெங்கள் நாடே
சிந்தைதெளிந் திட்டதனி நாடெங்கள் நாடே
ஐயனடி யேனறியாப் பருவத்தே வந்து
ஆட்கொண்டு காட்டிவைத்த தெங்கள் வளநாடே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்சுபிறப் பிறப்பறுக்கும் நாடெங்கள் நாடே
மெய்யிற்சிவம் பிறக்கவைக்கும் நாடெங்கள் நாடே
செஞ்சரண நிலவுவிரி நாடெங்கள் நாடே
திரையற்ற நீர்போன்ற நாடெங்கள் நாடே
அஞ்சுமிக வழியறியா தயர்ந்துமனம் துடித்து
ஆறாக விழிபெருக அலமந்து வாடித்
தஞ்சமென்ற எளியனெனை அஞ்சலென்று காத்த
தவஞானக் குருவடிவங் காட்டிவைத்த நாடே

## நின்றும் இருந்தும் நடந்தும் நினைமின்

நிலை மண்டில ஆசிரியப்பா

சென்றன சென்றன வாழ்நாள் அனைத்தும்
குன்றின குன்றின செல்வமும் இளமையும்
ஒன்றிய வகையால் உஞற்றுக அறனைக்
கன்றிய காலன் கணத்தினில் வருவான்
ஆதலின்,
நின்றும் இருந்தும் நடந்தும் நினைமின்
பொன்று முடலைப் போற்றுத லொழிமின்
நன்றுதீ தென்னும் நாட்டம் விடுமின்
அன்று மின்றும் என்று மான்மா
இருந்த படியே இருக்குஞ் சீரை
அருந்தவ யோக ரறிந்தாங் கறிந்து
தெளிந்து சீவன் முத்தராய் உலகில்
பொருந்தி வாழ்தல் போற்றுந் தகைத்தென்!

## சங்கு

எல்லாருள் ளத்திலும் இருந்தூதுஞ் சங்கு
ஏத்துவார் தங்களுக் கருள் கொடுக்குஞ் சங்கு
கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுஞ் சங்கு
கண்ணன்றன் திருக்கரத்தில் விளங்குகின்ற சங்கு
இல்லாத பேர்களும் கேட்டுவாங்குஞ் சங்கு
எல்லாரும் எப்போதும் விளிக்கின்ற சங்கு
செல்லாரு மிலங்கையிலே மலிகின்ற சங்கு
செருவிலே முழங்குகின்ற செவிமடுக்குஞ் சங்கு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமச்சி வாயவென நாம் வாழ்குவோமே

நேரிசை ஆசிரியப்பா

அன்பே சிவமென ஆன்றோ ரிசைத்த
இன்பந் தரும்பும் இனியவா சகத்தை
இன்னு மறிந்திலேன் இரவும் பகலும்
பொன்னும் பொருளும் போகமும் வேண்டினேன்
காக்க வேண்டும் கடைக்கண் ணாலே
நோக்க வேண்டும் நூல்வல் லோனே
சேர்க்க வேண்டும் திருவடி யதனில்
ஆர்க்கு முணர அரியபெம் மானே
ஐயனே! அரசே! ஆருயிர்க் குயிரே!
வையக நடனஞ் செய்யுமா தவனே!
பொய்யுங் கொலையும் புலையுந் தவிரவும்
சைவ மோங்கவுஞ் சத்தியந் தழைக்கவும்
தெய்வமுண் டென்னுஞ் சித்தந் திகழவும்
கைவினை செய்து கழலடி போற்றவும்
செய்வன எல்லாஞ் செவ்வனே செய்யவும்
மெய்யடி யார்கள் மேன்மேற் கிளைக்கவும்
தையலார் தம்மைத் தாயெனப் பேணவும்
நைந்துநைந் துருகி நைந்து
நமச்சி வாயவென நாம்வாழ் குவமே.

கண்ணுக்கு அணிகலம் குருநாதன் பாதம்
விண்ணுக்கு அணிகலம் சந்திரன் விளம்பு
மனத்திற்கு அணிகலம் மாசற்றார் கேண்மை
தனத்திற்கு அணிகலம் தண்ணருள் தானம்
வனத்திற்கு அணிகலம் மயிலுங் குயிலும்
தினத்திற்கு அணிகலம் தினகரன் சேவடி
பணத்திற்கு அணிகலம் பசித்தோர்க் குணவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடியார்

ஆடுவர் பாடுவர் அந்தியும் சந்தியும்
கூடுவர் குணம்பல பேசிக்கும் பிடுவர்
தேடுவர் செய்வதொன் றறிகிலர் திடமுடன்
நாடுவர் வாடுவர் நம்பர்தம் அடியரே

அச்சமும் கோபமும் அறிகிலர் பிரிவிலர்
பிச்சையே நச்சுவார் பிணங்குவார் இணங்குவார்
நிச்சமும் நோயிலர் நேயமே உருவினர்
நச்செழில் மிடறுடை நம்பர்தம் அடியரே

நீறணி நின்மலா நெற்றியங் கண்ணனே
ஆறணி சடையனே அம்பிகை பாகனே
சீறர வணிதரு செல்வமே எனப்பல
கூறியே குரைகழல் கூடுவர் அடியரே

அந்தமும் ஆதியும் அறியொணா ஒருவனே
எந்தையே ஈசனே எனப்பல சொல்லியே
கந்தமா மலர்கொடு காலையும் மாலையும்
வந்திப்பர் மலரடி வரங்கிளர் அடியரே

சந்திரன் தவழ்தரும் சடையனே விடையனே
இந்திரன் முதலியோர் இறைஞ்சிடும் இறைவனே
சுந்தரர்க் காகமுன் தூதுசெல் அடியரே
எந்தையே எனச்சொல்லி ஏத்துவார் அடியரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகில் பேரருள் ஆரறிவாரே

அண்ட சராசரம் அவன்திரு மேனி
அண்ட சராசரம் அவன்திரு ஆடல்
அண்ட சராசரம் அவனே யாகும்
அண்ட சராசரம் முழுதும் அதிசயம்

அஞ்செழுத் தாலே அனைத்தும் ஆயின
அஞ்செழுத் தாலே அனைத்தும் உதித்தன
அஞ்செழுத் தாலே அனைத்தும் நிலைத்தன
அஞ்செழுத் ததிசயம் ஆரறி வாரே

அன்பே கடவுள் அன்பே யுலகம்
அன்பே உயிர்கள் அன்பே யனைத்தும்
அன்பே ஆவதும் அழிவதும் போலாம்
அன்பின் அதிசயம் ஆரறி வாரே

ஆதியும் அந்தமும் இல்லா ஒருவன்
ஆதியும் அந்தமு மாய்வரு காரணம்
ஆதிதன் அருள்கொண் டறிவதே யன்றி
ஓதி யறிந்தவர் ஒருவரும் இலரே

அலகில் உயிர்களை ஆக்குவா னவனே
அலகில் உயிரென நிற்கும் அதிசயம்
அலகில் வானவர் தானவ ரறியார்
அலகில் பேரருள் ஆரறி வாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவனடிக்கன்புசெய் அனைத்துஞ் சிவமே

சிவனடிக் கன்பு செய்குவர் பெரியர்
சிவனடிக் கன்பு செய்கிலர் சிறியர்
சிவனடிக் கன்பு சிறப்பினை யளிக்கும்
சிவனடிக் கன்பு சீவன் முத்தியே

சிவனடிக் கன்பு தீவினை யொழிக்கும்
சிவனடிக் கன்பு தெளிவினை யளிக்கும்
சிவனடிக் கன்பு சித்தங் களிக்கும்
சிவனடிக் கன்பு சின்மய மாக்குமே

சிவனடிக் கன்பு செய்பவம் போக்கும்
சிவனடிக் கன்பு திருவரு ளாக்கும்
சிவனடிக் கன்பு சிவகதி யாக்கும்
சிவனடிக் கன்பு செப்புந் தகைத்தோ

சிவனடிக் கன்பு சிவயோக மாகும்
சிவனடிக் கன்பே சிவஞான மாகும்
சிவனடிக் கன்பே சிவபோக மாகும்
சிவனடிக் கன்பே சிவமய மாமே

சிவனடிக் கன்புசெய் தேகம் பொன்மயம்
சிவனடிக் கன்புசெய் தேகஞ் சின்மயம்
சிவனடிக் கன்புசெய் தேகம் நம்வயம்
சிவனடிக் கன்புசெய் தேகஞ் சிவமயம்

சிவனடிக் கன்பு திரிகால மறியும்
சிவனடிக் கன்பு திரிலோக மறியும்
சிவனடிக் கன்பு திரிமூர்த்தி யறியும்
சிவனடிக் கன்பு திரிதோஷ மிறக்குமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனடிக் கன்புசெய் திருசிய மிறக்கும்
சிவனடிக் கன்புசெய் திருக்குப் பிறக்கும்
சிவனடிக் கன்புசெய் திரிகுண மிறக்கும்
சிவனடிக் கன்புசெய் சித்தந்தித் திக்குமே

சிவனடிக் கன்புசெய் தேவரும் இல்லை
சிவனடிக் கன்புசெய் சீவரும் இல்லை
சிவனடிக் கன்புசெய் சித்தரும் இல்லை
சிவனடிக் கன்புசெய் அனைத்துஞ் சிவமே!

## முத்திக்கு வழி

ஆசிரியப்பா

முத்திக்கு வழியை மொழியக் கேண்மோ!
சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்திய வத்து விவேகம்
பத்திசெ யடியரைப் பணிதல் பகலவன்
எழுமுன் எழுதல் இரும்புன லாடல்
வழுவிலைந் தெழுத்தும் வரன்முறை பயிலல்
குருபதம் பணிதல் கோலநீ றணிதல்
வரும்பசிக் குண்ணல் வாயுற வாழ்த்தல்
சாத்திரம் பயிறல், தன்போற் பிறரையும்
பார்த்தல்; பணப்பற் றொழித்தல்; பண்புடன்
வார்த்தை யாடல்; வாதனை தீர்த்தல்
கோத்திரங் குலமெனுங் கோட்பா டொழித்தல்
எட்டுணை யேனும்
வேண்டுதல் வேண்டாமை யின்றி யென்றும்
ஆண்டவ னடிக்கீ ழமர்ந்து வாழ்தலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வமிது தானே

அன்னைபிதாக் குருவாகி யாண்டுகொண்ட தெய்வம்
அடியவர்தம் மனத்திலே ருசிக்கின்ற தெய்வம்
என்னையெனக் கென்னாலே யறிவித்த தெய்வம்
எல்லாமா யல்லவுமா யிருக்கின்ற தெய்வம்
முன்னைவினை யெல்லாம் முடித்தாண்ட தெய்வம்
மூதாதை மாரெனக்குக் காட்டிவைத்த தெய்வம்
தென்னைபனை சேரிலங்கை வாழ்கின்ற தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள தெய்வமிது தானே

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பளிக்குந் தெய்வம்
காணாத காட்சியெல்லாங் காட்டுகின்ற தெய்வம்
நில்லாத நீர்சடைமேல் நிற்கவைத்த தெய்வம்
நெற்றியின்மே லொற்றைக்கண் நேரவைத்த தெய்வம்
எல்லார்க்குந் தெய்வ மென்னுடைய தெய்வம்
இதையறிந்து வாழுவார் எல்லாருந் தெய்வம்
செல்லாரு மிலங்கையில் வாழ்கின்ற தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள தெய்வமிது தானே

நம்பினபேர் தமக்கருளை நயந்தளிக்குந் தெய்வம்
நாதாக்கள் போற்றுகின்ற மெய்ஞ்ஞானத் தெய்வம்
வெம்பிணிக்கு மருந்தாக விளங்குகின்ற தெய்வம்
வேதாந்தத் தெய்வமுயர் சித்தாந்தத் தெய்வம்
அம்பிகைதம் பாகமா யமர்ந்திருக்கும் தெய்வம்
அவரவர்க்கு அதுவதுவா யிருக்கின்ற தெய்வம்
தும்பிமுக னறுமுகவன் தோத்திரஞ்செய் தெய்வம்
சோலைசூ ழிலங்கைவாழ் தெய்வமிது தானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மைக்கும் மறுமைக்குந் துணையான தெய்வம்
எழிலாருஞ் செஞ்சடையில் மதிவைத்த தெய்வம்
அம்மையா யப்பனா யாதரிக்குந் தெய்வம்
அவனிமே லென்போல விளங்குகின்ற தெய்வம்
பொய்ம்மாயச் செருக்கெல்லாம் புறக்கணிக்குந் தெய்வம்
போதாரும் மலர்தூவிப் போற்றுகின்ற தெய்வம்
செம்மைசே ரிலங்கையிலே வாழுகின்ற தெய்வம்
சித்தத்துட் டித்திக்குந் தெய்வமிது தானே

பொறியைந்தும் வென்றவர்பாற் பொருந்துகின்ற தெய்வம்
போக்குவர வில்லாமல் நிறைகின்ற தெய்வம்
அறிவொன்ற நினைப்பவர்பா லமர்ந்திருக்குந் தெய்வம்
அம்புவியில் மாமனாய் வழக்குரைத்த தெய்வம்
குறியொன்று மில்லாமற் கூத்தாடுந் தெய்வம்
குழந்தைவடி வேலவனைக் கொண்டாடுந் தெய்வம்
வெறிகமழுஞ் சோலைசூ ழிலங்கைவாழ் தெய்வம்
விருப்புவெறுப் பில்லாத தெய்வமிது தானே!

## அரியதிலரியது ஆன்மா

**அரியதி லரியது ஆன்மா வதுதான்
பெரியதிற் பெரியது பேத மற்றது
கருமைசெம்மை வெண்மையைக் கலந்து நிற்பது
பிரிவறி யாதது பின்முன் அற்றது
பொறிவழி போகாப் புண்ணியர்க் குரியது
நெறியெலாங் கடந்து நிற்கும் நெறியது
அறிவுக் கறிவாய் ஆனந்தந் தருவது
குறிகுண மற்றது கூத்தாட வல்லது
துரியா தீதத்தில் தூய்மையா யுள்ளது
மரித்துப் பிறவா மாண்பை யுடையது
திரிபுர மெரித்தது தேவர்சிறை மீட்டது
நரியைக் குதிரை யாக்கி நயந்தது
விருப்பும் வெறுப்பும் அற்றவர் பாலது
கருப்போ காதென்னைக் காத்து நிற்பது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தன் சேவடி அடைய இன்பமே

வாச மலரடி பேச வினியது
ஆசை விடுவிடு ஆரு மிணையிலர்

ஈச னிணையடி ஏத்து மடியவர்
நாச மடைகிலர் நாடு திடமுடன்

எந்த நேரமும் இறைவ னிணையடி
சிந்தை செய்பவர் சீவன் முத்தரே

ஏறு வாம்பரி யேறுவா னெந்தை
கூறுவார் வினை கோடி தீருமே

நீறு பூசிய நிமல னடியினை
கூறு வார்தமைக் கூடி டாவினை

ஆறு சூடிய அழகன் சேவடிப்
பேறு பெற்றவர் பிறப்ப தில்லையே

வீடு சேர்வதில் விருப்ப முள்ளவர்
பாடு வார்தினம் பரமன் பாதமே

வேண்டு வார்வினை நீக்கு மாண்டவன்
நீண்ட சேவடி நினைக்க முத்தியே

மாண்டு போனவர் என்பு மார்பினில்
பூண்ட அன்பனைப் போற்ற இன்பமே

பித்த னென்றவர் பிறவி நீக்கிய
அத்தன் சேவடி அடைய இன்பமே

## வேறு

பொழில்வாழும் பூங்குயிலே பொன்னொடுமா மணிமுத்தும்
ஒழியாமற் கரைசேர்க்கும் ஓங்குகடல் சூழிலங்கை
அளியாளன் எனையாளும் ஆண்டவன்றன் திருநாமம்
தெளிவாக நீயெனக்குத் தீங்குரலால் கூவாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலர் போலவே பாரில் வாழ்வரே

மத்த மாமலர் வைத்த வள்ளலை
நித்தம் போற்றுவார் நீடு வாழ்வரே

மனத்தில் வஞ்சகம் வைத்த பாவிகள்
இனத்தைச் சேர்ந்திடில் ஈனம் ஈனமே

இளமை இன்பத்தில் இச்சை வைத்திடில்
எழுமை யுந்துன்பம் எய்து மெய்துமே

சூல பாணியைத் துதிக்கும் அன்பரைக்
காலன் கண்டிடிற் கலங்கி யோடுமே

அம்மை யப்பனை ஆர்வ மாய்த்தொழ
இம்மை நற்பயன் எய்துந் திண்ணமே

வேள்ப டச்செய்த விமல னைத்தொழ
ஊழ்வி னைப்பயன் ஒன்று மில்லையே

கொச்சை மக்களைக் கூடும் மூடர்கள்
அச்சத் தால்மனம் அலைவர் திண்ணமே

தனக்குத் தானிக ரான சங்கரன்
துணைப்ப தத்தினைத் துதிக்க இன்பமே

நீல கண்டனை நினையு மன்பர்கள்
ஞாலம் மெச்சவே நாளும் வாழ்வரே

கோல மாமலர் கொண்டு போற்றுவார்
பாலர் போலவே பாரில் வாழ்வரே!

## உய்ய வழி காட்டுவாய்

தெய்வமே யானெனதெ னுஞ்செருக் கால்மனது
 தீயவழி செல்லு தையோ
செய்வதொன் றறிகிலேன் தேவாதி தேவனே
 திருவருட் பார்வை சாத்தி
உய்யவழி காட்டுவாய் உன்னையல் லாதுதுணை
 யுலகத்தில் எவருமுண்டோ
வையகம் புகழ்நல்லை வாழும்வடி வேலனே
 மயிலேறு தம்பிரானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்பின் வா மனமே

அன்பு சிவமென் றருளாளர் சொன்னமொழி
என்புருகச் செய்யுமன்றோ என்பின்னே வாமனமே!

மண்புகுந்த மாலும் மலரோனுங் காணரிய
என்குணத்தான் பொன்னடியை ஏத்தான்பின் வாமனமே!

கண்ணிறைந்த செல்வத்தை கங்குல்பகல் காணாமல்
உண்ணிறைந்த பேரன்பால் ஓதவென்பின் வாமனமே!

பொன்போலும் மேனியனைப் பூரணனைப் புண்ணியனை
என்போல நின்றானை ஏத்தவென்பின் வாமனமே!

தன்னொப்பா ரில்லாத தத்துவனைத் தண்ணருளைச்
சுண்ணவெண் ணீற்றானைத் தொழவென்பின் வாமனமே!

ஒன்றாய் இரண்டாய் ஒருமூன்றாய் நின்றானை
என்றாயாய் நின்றானை ஏத்தவென்பின் வாமனமே!

உணர்ந்தார்க் குணர்வரிய ஓங்கார மெய்ப்பொருளைக்
கணந்தான் மறவாமல் கைதொழவா என்மனமே!

சித்தத்துள் தித்திக்குந் தெள்ளமுதைத் தெய்வத்தை
எத்திக்கும் போற்றுதற்கு என்பின்னே வாமனமே!

முத்திக்கு வித்தான மூவா முழுமுதலைப்
பத்திக்க என்பின்னே பறந்துவா என்மனமே!

சத்தி சிவமாகித் தன்னிலையிற் பிரியாத
வித்தகனைப் போற்றுதற்கு விரைந்தென்பின் வாமனமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்

சிவதொண்டு செய்வார்க்குச் செல்வமுண்டு கல்வியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சீருமுண்டு பேருமுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சிந்தைத் தெளிவுமுண்டு
சிவதொண்டு செய்வார்கள் சேருவரோ தீநெறியில்

சிவதொண்டு செய்வார்கள் திசையெட்டு மாளுவார்
சிவதொண்டு செய்வார்கள் சென்மமலம் நீங்குவார்
சிவதொண்டு செய்வார்கள் தேவரையு மேவல்கொள்வார்
சிவதொண்டு செய்வார்கள் செத்துப் பிறவார்கள்

சிவதொண்டு செய்து திருமா லுலகாண்டான்
சிவதொண்டு செய்துதிரு வாரூரான் சிவமானான்
சிவதொண்டு செய்தரசன் சேர்ந்தான் கழல்முன்னாள்
சிவதொண்டு செய்வார்க்கு முண்டோ குறைசொல்வாய்

சிவதொண்டு செய்வார்க்குச் சினமில்லை அச்சமில்லை
சிவதொண்டு செய்வார்க்குத் தீயவகங் காரமில்லை
சிவதொண்டு செய்வார்க் கிரவும் பகலுமில்லை
சிவதொண்டு செய்வார்க்குப் பழியூ னுணவுமில்லை

சிவதொண்டு செய்வார்க்குச் சாந்தம் பொறுமையுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் திரிகால வுணர்ச்சியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் தீயபிணி நோயில்லை
சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடைக்கலம் அடைக்கலம்

இராகம் - ஆரபி தாளம் - ஆதி

பல்லவி

பாரையனே - கடைக்கண்ணால் - பாரையனே

சரணங்கள்

பாரைய னேமனம் பதையாம லடியேனைச்
சேரைய னேயுன் செழுங்கழற் கடைக்கலம்

ஆரைய னேதுணை அடியேற் குனையல்லால்
தீரைய னேமிடி திருவடிக் கடைக்கலம்

ஊருந் துணையில்லை உற்றார் துணையில்லை
ஆருந் துணையில்லை அடியே னடைக்கலம்

சீருந் துணையில்லை செல்வந் துணையில்லை
சீரார் திருவடிக் கடியே னடைக்கலம்

சிந்தையி லன்பு பொருந்த வடியேற்குத்
தந்திடு நின்னருள் தாளிணைக் கடைக்கலம்

எந்தையே எம்பெரு மானேயென் றடியார்கள்
வந்தனை செய்யும் மலரடிக் கடைக்கலம்

கொத்தார் குழலுமை கொண்டாடு மையனே
செத்தா ரெலும்பணி செல்வநிற் கடைக்கலம்

வித்தார விடையேறி வெளியில் நடம்புரி
அத்தாவுன் பொன்னடிக் கடியே னடைக்கலம்

தத்தாதித் தோம்திமி தாந்தோமென் றாடிடும்
கத்தாவே யுன்னுடைக் கழலடிக் கடைக்கலம்

நெடியமா லயன்தேடிக் காணாமல் நின்றிடும்
நிமலனே நின்னடிக் கடைக்கல மடைக்கலம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவநாமஞ் சொல்லுவோம்

இராகம் - நாட்டை தாளம் - ரூபகம்

பல்லவி

நாமஞ் சொல்லுவோம் - சிவ
நாமஞ் சொல்லுவோம்

சரணங்கள்

நாமஞ் சொல்லுவோம் நமனை வெல்லுவோம்
நாமே அவனென்று நடந்து செல்லுவோம்

சோம சுந்தரன் பாதங் காணுவோம்
சும்மா விருக்கின்ற சூட்சம் பேணுவோம்

சினத்தைக் கொல்லுவோம் மனத்தை வெல்லுவோம்
அனைத்து மவனென்று அகத்தி லெண்ணுவோம்

கையில் மலர்கொண்டு காலை மாலையும்
செய்ய மேனியன் அடியில் வீழுவோம்

என்பு பூண்டவன் என்னை யாண்டவன்
இவனை வேண்டினால் என்று மின்பமே

சிரித்து முப்புர மெரித்த தேவனை
சிந்தை செய்குவோர் தேவ ராவரே

கமல நான்முகன் கண்ணன் காண்கிலான்
எமது நாயகன் என்பர் பெரியரே

வழிகள் இரண்டையு மடைக்க வல்லவர்
ஒழியா இன்பத்தி லுற்று வாழ்வரே

தேனும் பாலினு மினிய தெய்வத்தை
நானும் நீயுமாய் நாளும் போற்றுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மானை

### தரவு கொச்சகம்

அம்மையு மப்பனுமாய் நின்றாரா ரம்மானை
இம்மை மறுமைக் கிறைவர்கா ணம்மானை

இம்மை மறுமைக் கிவரிறைவ ராணக்கால்
தம்மையறிந் தார்தலை யாவரோ அம்மானை

செம்மைமன முண்டானாற் சேர்வர் தலையிடத்தில்
உம்மையங்கே காண முடியாதா மம்மானை

இந்திரசா லங்கனவென்று முன்னோரிவ் வுலகைத்
தந்திரமாய்ச் சொன்ன சார்பென்ன வம்மானை

சார்புகெட ஒழுகும் தன்மையருக் கல்லால்
ஆருமறி யார்களந்த ரகசியத்தை அம்மானை!

## அருமையான தெய்வம்

அண்ணன்மாரே தம்பிமாரே ஆச்சிமாரே கேளீர்
அருமையான தெய்வம்நாங்கள் அதையறிந்து வாழீர்

இன்னதன்மை என்றுநம்மை எடுத்துச்சொல்வா ருண்டோ
என்னபய மெங்களுக்கு எல்லாஞ்சிவ மன்றோ

அவனன்றி யோரணுவு மசையாதெனப் பெரியோர்
அன்றுசொன்ன நிறைமொழியை மறப்பதுவுஞ் சரியோ

அங்கிங்கெ னாதபடி யெங்குஞ்சிவ மென்று
அறிந்தடங்கி யகிலத்திலே வாழ்வதுவே நன்று

காணுங்கண்ணிற் கலந்தகண்ணே என்னுஞ்சிவ தொண்டர்
கருத்தைக்கண்டு வருத்தமற்று வாழ்தல்சிவ தொண்டு

அனைத்துமொன்றா யிருக்குதென வறிந்தபெரி யோர்கள்
அடியிணையை முடிதனிலே அறிந்து கொண்டேன் சிறியேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சற்குரு தாள்கள் வாழ்க

அத்துவா மார்க்கமாறும் அகற்றியே யடியனேனைத்
தத்துவா தீதனாக்குஞ் சற்குரு தாள்கள்வாழ்க

ஆக்கைநீ யல்லைநீயோ ஆன்மாவென் றெனக்குச்சொல்லித்
தீக்கைவைத் தாண்டுகொண்ட தேசிகன் றிருத்தாள்வாழ்க

இருந்துபா ரென்றெனக்கோர் இனியநல் வாக்குத்தந்த
அருந்தவன் என்னும்வல்ல ஆசான்றன் தாள்கள்வாழ்க

ஈயாத புல்லர்தங்கள் இல்லத்திற் கேகாவண்ணம்
தாயாரைப் போல்வந்தாண்ட சற்குரு தாள்கள்வாழ்க

உன்மத்தன் போலேவந்தென் னுடல்பொரு ளாவிமூன்றும்
தன்னத்தம் வாங்கிக்கொண்ட சற்குரு தாள்கள்வாழ்க

ஊனுமாய் உயிருமாகி உள்ளுமாய்ப் புறம்புமாகி
நானுமாய் நீயுமாகி நடஞ்செயுந் திருத்தாள்வாழ்க

எண்ணிய வண்ணம்வாழ எனக்குநல் லருளைத்தந்த
கண்ணிய முடையசெல்வன் கழலடி யென்றும்வாழ்க

ஏடவிழ் கோதைமாதர் எழில்கண்டு மயங்காவண்ணம்
தாடலை தன்னில்வைத்த சற்குரு தாள்கள்வாழ்க

ஐயமேன் காணுமென்றே அடியனேன் தன்னைநோக்கி
உய்யநல் லருளைத்தந்த உத்தமன் பாதம்வாழ்க

ஒருமொழி யதனாலென்னை ஓவியம் போலவாக்கி
வருபயம் நீக்கியாண்ட வள்ளல்தம் திருத்தாள்வாழ்க

ஓமெனும் எழுத்தினுள்ளே உலகெலாம் விளங்கக்காட்டி
நாமென்று சொல்லுகின்ற நற்றவன் றிருத்தாள்வாழ்க

ஔவன நல்லைதன்னில் அழகிய ஆடல்காட்டிச்
செவ்விதி னாண்டுகொண்ட செல்வன்றன் தாள்கள்வாழ்க

அஃகமுங் காசுந்தேடி அலைந்துநான் திரியாவண்ணம்
நஃகுதல் செய்தநல்ல நாதன்றாள் வாழ்க! வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவடி வாழ்க

குறள் வெண் செந்துறை

அகரமாம் எழுத்துப்போல அனைத்தினுங் கலந்துநின்றே
இகபரம் இரண்டுமீந்த எழிற்குரு திருத்தாள் வாழ்க

ஆணுமாய்ப் பெண்ணுமாகி அன்னையும் பிதாவுமாகிக்
காணவே என்முன்வந்த கழலடி யென்றும் வாழ்க

இருவினை நீக்கியெம்மை இன்பமாம் நிலத்தில் வைக்கத்
திருவுருத் தாங்கிவந்த செல்வநின் திருத்தாள் வாழ்க

ஈன்றிடு தந்தைதாயோ டெய்திய சுற்றமாகித்
தோன்றிய குருவுமான துணைவநின் திருத்தாள் வாழ்க

உணர்ந்தார்க்கு முணரவொண்ணா ஒருவனே என்போல்வந்து
குணங்காட்டி ஆண்டுகொண்ட குருவின்சீர்ப் பாதம் வாழ்க

ஊசிமே னுனியினின்றே உக்கிர தவத்தையாற்றும்
மாசில்மா தவருங்காணா மலர்ப்பதம் மனத்தில் வாழ்க

என்னைநீ வேறாயெண்ணி இடர்ப்பட வேண்டாமென்று
தன்னைத்தந் தாண்டுகொண்ட சற்குரு தாள்கள் வாழ்க

ஏதுமொன் றறநில்லென்றே யெனக்குநல் லருளைத்தந்த
தீதிலாத் தேசிகன்றன் திருவடி வாழ்க! வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமானைப் பார்த்துநின் றாடுமயிலே

இராகம் - ஆனந்த பைரவி

ஆடுமயிலே பணிந் தாடுமயிலே
ஆண்டவனைக் கண்டுதெளிந் தாடுமயிலே

வீடுநமக் கெப்போதும் சொந்த மென்றே
வீணாசைப் படுவதெல்லாம் பந்த மென்றே
கூடுவிட் டுயிர்போமுன் கும்பிட்டுக் கொண்டே
குழைந்து குழைந்துநின் றாடுமயிலே (ஆடுமயிலே)

பொறிவழி போம்மனத்தை அடக்கிக் கொண்டே
பூரண நிட்டையிலே மடக்கிக் கொண்டே
அறிவறி யாமையிரண்டும் நாமல்ல வென்றே
ஆனந்தமாய்ப் பணிந்தெழுந் தாடுமயிலே (ஆடுமயிலே)

எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணிக்கொண்டே
இரந்திரந் தைந்தெழுத்தைப் பன்னிக் கொண்டே
ஔவியம்பொ றாமைகோபம் அகற்றிக் கொண்டே
ஆண்டவனைக் கண்டுதெளிந் தாடுமயிலே (ஆடுமயிலே)

ஒருபொல்லாப்பு மில்லையென்ற புத்தியைக் கேட்டே
ஓம்சிவாய நமவெனச் செபித்துக் கொண்டே
குருநாதன் திருவடியைக் கும்பிட்டுக் கொண்டே
கூடிக்க ளித்துநின் றாடுமயிலே (ஆடுமயிலே)

தேசகாலம் யாவையும் மறந்து நின்றே
சிறுபிள்ளையைப் போலமனம் சிறந்து கொண்டே
பேசவுமறி யாமற்பேய்க் கோலங் கொண்டே
பெருமானைப் பார்த்துநின் றாடுமயிலே (ஆடுமயிலே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவநாமஞ் சொல்லித் தெளியோமோ

இராகம் - செஞ்சுருட்டி தாளம் - ஆதி

பல்லவி

சிவநாமஞ் சொல்லித் தெளியோமோ
திருவடி கண்டு களியோமோ (சிவ)

உவமை கடந்தவின்பம் எமக்குள்ளே யுண்டு
ஓகோ வுணர்ந்து செய்சிவ தொண்டு (சிவ)

தத்துவம் யாவுஞ் சடமென அறிவோம்
சத்தியம் ஆன்மா நித்தியம் உய்வோம் (சிவ)

அறிவறி யாமை யிரண்டும்நீ யல்லை
அரிய தத்துவம் தெரிவது தொல்லை (சிவ)

பொறிவழி மனத்தைப் போகாமற் கொல்வோம்
பூரண மான நிட்டையிற் செல்வோம் (சிவ)

விருப்பும் வெறுப்பும் வீணெனக் குறிப்போம்
வேதாந்த சித்தாந்தஞ் சமமெனத் தெரிப்போம் (சிவ)

நன்றியை நாங்கள் மறந்திட மாட்டோம்
நாடெங்குஞ் சென்று சிவதொண்டு செய்வோம் (சிவ)

உத்தம நட்பை ஒருநாளும் பிரியோம்
ஓம்சி வாய நமவென் றுரைப்போம் (சிவ)

அனைத்துஞ் சிவன்செய லென்னநா மெண்ணுவோம்
ஆன்மாக்க ளிடத்தில் அன்புநாம் பண்ணுவோம் (சிவ)

குருவடி யொருபோதுங் கும்பிட மறவோம்
கூடாத கூட்டத்திற் கூடயாம் அறியோம் (சிவ)

இன்பமே யல்லாமற் றுன்பம் நமக்கில்லை
ஈசனை மறந்தால் வந்திடுந் தொல்லை (சிவ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாமவன் செயலே

வெண்பா

எல்லா மவனேயா மெல்லா மவன்செயலே
கல்லாய் மனிதா கவலையேன் - நில்லாயோ
நீள நினையாய் நினைந்து நினைந்துருகி
வாழ நினையாய் மதி

மதிக்கு மதியீ மதிசூடு வானை
மதிக்கு முனக்கு மரணம் - உதிக்குமோ
மார்க்கண்ட னுக்காய் மறலிபட்ட பாட்டினைப்
பார்க்கிலுனக் கென்ன பயம்

பயமுண்டோ பஞ்சப் பொறிவழிபோ கார்க்கு
நயமுண்டோ நட்டமுண்டோ நாடில் - அயலுண்டோ
என்ன குறைதானுண் டெங்கெழிலென் ஞாயிறுதான்
சொன்னே னதுவே சுகம்

சுகதுக்கம் ஒன்றுமுனக் கில்லைநீ தூயோன்
அகநெகவே யாண்டவனை யந்தி - மிகுசந்தி
ஏத்தித் துதித்துநீ எல்லார்க்கும் நன்மைசெய்
போற்றிப் புகழ்ந்து புறம்

புறத்தி லலையாதே போனவற்றை யெண்ணி
அறத்தை மறவாதே யாண்டான் - திறத்தையே
சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தனா தீதனாய்
அந்தி பகலறியா தாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களை யாள் குருநாதா

இராகம் - சஹானா                    தாளம் - ஆதி

பல்லவி

எங்களை யாள்குரு நாதா - நின்
இணையடிபணிந் திடவரந் தாதா

சரணங்கள்

செந்நெலும் கன்னலும் செறியும்நல் லூராய்
செல்லப்ப னென்னுந் திருப்பெயர்க் குரியாய்
அன்னைபி தாக்குரு தெய்வமு மானாய்
அண்டிவந் தேனெனை யனுதினங் காப்பாய் (எங்)

உல்லாச மான நடையுடை யோனே
உன்போ லொருவர் உலகினிற் கிடையார்
எல்லாம் வல்லவர் செயலையா ரறிவார்
ஏத்தி யேத்தித் தொழவெனைக் குறியாய் (எங்)

பித்த னென்றுபலர் பேசிய திறத்தாய்
பெற்றி பிறரா லறியொணாத் தரத்தாய்
அத்தனே யுனக்கே யபய மபயம்
ஆருக்கு மினிமே லெனக்கென் னபயம் (எங்)

ஒருபொல் லாப்பும் இல்லையென் றுரைத்தோய்
உண்மை முழுதும் என்றெனக் குரைத்தோய்
கருத்தினுட் கருத்தாய் விளங்குங்கண் மணியே
காமக் குரோதம் அற்றவர்க் கணியே (எங்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லு சிவமே

சொல்லு சிவமே சொல்லு சிவமே
சுகம்பெற மார்க்கமொன்று சொல்லு சிவமே
வெல்லும் பகையொழியச் சொல்லு சிவமே
வேறுபொரு ளில்லையென்று சொல்லு சிவமே
அல்லும் பகலுமறச் சொல்லு சிவமே
அன்பே சிவமென்று சொல்லு சிவமே
கல்லுங் கரையக்கவி சொல்லு சிவமே
காயமே கோயிலென்று சொல்லு சிவமே

அல்லலற்று வாழவழி சொல்லு சிவமே
அகம்பிர மாஸ்மியென்று சொல்லு சிவமே
எல்லவர்க்கு நல்லனென்று சொல்லு சிவமே
எல்லாஞ் சிவன்செயலாய்ச் சொல்லு சிவமே
நில்லாதிவ் வாழ்வென்று சொல்லு சிவமே
நீயுநானு மொன்றென்று சொல்லு சிவமே
பொல்லாப்பிங் கில்லையென்று சொல்லு சிவமே
புத்தடியோம் நாங்களென்று சொல்லு சிவமே

கொல்லாமை பெரிதென்று சொல்லு சிவமே
கூசாமல் எவர்முன்னுஞ் சொல்லு சிவமே
நல்லோர் நடுவிருக்கச் சொல்லு சிவமே
நாமே யனைத்துமென்று சொல்லு சிவமே
உல்லாச மாயெங்குஞ் செல்லு சிவமே
உண்மை முழுதுமென்று சொல்லு சிவமே
கல்லார்க்குங் கதியென்று சொல்லு சிவமே
கட்டிம னத்தையாளச் சொல்லு சிவமே

## இறைவா உனக்கபயம்

என்னையெனக் கென்னாலே காட்டிவைத்தஇறைவா
எல்லாஞ்செய வல்லவனே என்றன் பெருமானே
அன்னையினும் அப்பனினும் அன்புமிக்க அரனே
ஆன்மாவுக் கான்மாவே யாதியந்தம் இல்லானே
தென்னைபனை சேரிலங்கைத் திருவேயென் செல்வமே
தேவாதி தேவனே சிறியே னுனக்கபயம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன்றுகொள் ஏழையேனை

விரும்புவார் விரும்பு முன்னம்
விரைந்து வந்தருள் செய்வானைக்
குரும்பைநேர் கொங்கை யாடன்
கூறனைக் கூற்றைக் காய்ந்து
பெரும்பயன் விளையா நின்ற
பெம்மானைப் பிறப்பில் லானை
அரும்புமா மலர்கொய் தேத்தி
யடியிணை பணிவர் வாழ்வார்

பணிபவர் நெஞ்சி னானே
பலபல கோலத் தானே
அணிக்கணி யாகி நிற்கு
மாதியே யமரர் கோவே
மணியணி கண்டத் தானே
மாற்றறி யாத பொன்னே
இனியுனை மறந்துய் வேனோ
ஏன்றுகொள் ஏழை யேனை

பொன்னொத்த மேனி யானே
பூங்குழல் பாகத் தானே
அன்னத்தா னரிகா ணானே
ஆவியோ டாக்கை யெல்லாம்
வண்ணத்த திருவ டிக்கீழ்
வைத்தனன் வருந்தா வண்ணம்
எண்ணத்தா னிணைகள் தந்தே
யேன்றுகொள் ஏழை யேனை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியதிற் பெரியது ஆன்மா

பெரியதிற் பெரியது சிறியதிற் சிறியது
அரியதில் அரியது ஆன்மா அதுதான்
ஒன்றென இரண்டென ஓதவொண் ணாதது
நன்றெனத் தீதென நாடவொண் ணாதது
என்று மிருந்த படியே யிருப்பது
என்று மெம்மை விட்டுப் பிரியாதது
இன்பம் படைப்பது துன்பந் துடைப்பது
முன்னிலைச் சுட்டு முளையா திருப்பது
ஆவது மழிவதும் அற்ற மெய்ப்பொருள்
தேவரும் முனிவருந் தேடியுங் காண்கிலர்
அப்படி யுள்ளது அடியேன் மனத்திலும்
செப்படி வித்தை செய்து நிற்குமே!

## சிவதொண்டன் சீர் தெரிமின்

நிலையியலாசிரியப்பா

அன்பே சிவமெனு மான்றோர் வாக்கை
யென்பே யுருக வெடுத்தெடுத் தோதும்
சிவதொண்ட னென்னுஞ் சின்னக் குழந்தை
சிவபெரு மான்றன் திருவரு ளாலே
எவரு முவப்ப யாழ்ப்பா ணத்திற்
பவவரு டத்துப் பன்னுமார் சுழிமதி
அவதரித் தானவன் றனையனை வோருங்
கவனமாய்க் கண்ணை இமைகாப் பதுபோல்
வளர்த்து வந்தார் வருடமா றளவுந்
தளர்ச்சி யென்பது தானறி யாதே
பலன்கரு தாது பணியாற் றுதலே
நலந்தரு கரும யோகமென் றடியார்
அறிந்தே யாற்றின ராத லாலே
அடியே னவர்தம் அழகிய பொன்னடி
முடிமிசைச் சூடினன் முழுது முண்மையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டனைத் தொழுமின்

வெண்பா

பலவருடம் மார்கழியிற் பார்தனிலே யெங்கள்
சிவனருளால் வந்தசிவ தொண்டன் - இவனையுடன்
ஏந்தி யெடுத்தணைத்தா ரின்போ டடியார்கள்
சாந்திலும் சாந்திதத் சத்

கண்ணையிமை காப்பதுபோற் காத்த வடியவர்க்கு
வண்ணைவா ழீசன் வரந்தருவான் - திண்ணமிது
சேருங்க ளொன்றாய்ச் சிவசிவா வென்றுகளி
கூருங்க ளெல்லாங் கொடுத்து

கொடுத்தார்க்கு முண்டோ குறைதா னவரை
யடுத்தார்க்கு முண்டோ வடுக்கல் - எடுத்தான்
தலைபத்துந் தத்தளிக்கச் செய்த சிவனைத்
தலையால் வணங்குந் தமர்க்கு

ஆறு வருடமவ னன்புடனே செய்ததொண்டு
கூறுந் தரமோ குவலயத்திற் - நேறீர்
எழுமின் விழுமினெல்லா மீசன் செயலாய்த்
தொழுமி னதுவே சுகம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவதொண்டர்க்கு விடுத்த வேண்டுகோள்

அகவல்

இளம்பிறை சூடிய எந்தை பெருமான்
வரம்பெறுந் திருவடி வாழ்த்தி வணங்கி
அன்னை தந்தை யாசா னடியார்
என்னு மிவர்களை யிணையடி பணிந்தே

ஒருபொல் லாப்பு மில்லையென் றோதிய
குருபரன் திருவடி கும்பிட்டுக் கொண்டிங்
கறஞ்செய விரும்பென ஒளவைப் பிராட்டி
சிறந்த மொழியை நினைந்து சிந்தையிற்

சிவதொண்டன் பணிக்குத் துணைசெயுந் தொண்டர்
எவர்க்கும் யாமீன் டியம்புதுங் கேண்மோ!
அடியார் பலரிவ் வாண்டே ழுளவும்
மிடியறக் காசு மிகவு மனுப்பினர்

அந்தநா ளடியார் தொகையோ குறைவாய்
வந்ததா லடியோம் வாளாவிருந்தனம் இனிமேலெவரும்
வருடந் தொறுமூன்று ரூபா வழங்கிற்
கருமங் கடைப்பிடித் தாற்றுதுங் காண்க

வெண்பா

**போது மளவும் பொருளீந்த மெய்யடியீர்**
**ஏதுங் குறைவே யிலைநீங்கள் - ஓதுமென்**
**சிந்தைகளி கூரச் சிவதொண்டு செய்வதற்குத்**
**தந்திடுவீர் மூன்றுரூபா தான்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க சிவனடி

வாழ்க சிவனடி வாழ்க சிவனடி வாழ்க சிவதொண்டன்
பல்வினை போக்கி நல்லருள் ஆக்கிப்பல்குக சிவதொண்டன்

பாழ்செயும் மாயா காரியம் அகலப்பணிசெய் சிவதொண்டன்
பக்தர்கள் எல்லாம் பாட ஆடப் பரவுஞ் சிவதொண்டன்

ஊழ்வினை போக உள்ளொளி ஓங்கஉயர்க சிவதொண்டன்
உண்மை முழுவதும் என்றுரை செய்யும்ஒருவன் கழல்வாழ்க

## உறுதி மொழியிதனை அறிவீரோ

சிவதொண்டன் நிலையத்திற் சேரீர்
தியானஞ் செய்துகடைத் தேறீர்
மவுனமாய் இருந்திளைப் பாறீர்
மந்திர மிதுவெனக் குறியீர்

அவனிவ னாரென அறியீரோ
ஆன்மா நித்தியம் தெரியீரோ
உவமை கடந்தவின்பம் உள்ளீரோ
உண்மை முழுதுமெனக் கொள்வீரோ

ஐம்பொறி வழியினிற் செல்லாதீர்
ஐம்புலன் தன்னை வெல்வீரே
வெம்பகை தன்னை விடுவீரே
வேதாந்த சித்தாந்தந் தொடுவீரே

ஒரு பொல்லாப்பு மில்லை யுணர்வீரே
ஓம்சிவாய நமவெனத் தொழுவீரே
உருகியுருகி இன்பம் பெறுவீரே
உறுதி மொழியிதனை அறிவீரே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் வீதியில்

இராகம் - பிலஹரி தாளம் - ரூபகம்

பல்லவி

எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே

அநுபல்லவி

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்தஇடம்
அதுவாத லாலே அதிசயம் மெத்த உண்டு
(எந்நாளும்)

சரணங்கள்

வேதாந்த சித்தாந்தம் கற்றதனா லென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினா லென்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே
(எந்நாளும்)

சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியம் தெரியும் நிபுணர்
பத்திசெய் உத்தமர் பரவும்நல் லூரில்
நித்தியம் வந்து பார்த்தால் முத்திநிச் சயமே
(எந்நாளும்)

## பரவ வரமருள்

மரகத மயில்மேல் வருமுருகா
அரகர சிவசிவ அறுமுகவா
சரவண பவனே சண்முகனே
வரந்தர வாவா என்முன்னே
அரவணி சிவனா ரருள்பாலா
பரவ வரமருள் பரமதயாளா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரமாமயில் ஏறும் வேலவ

இராகம் - கரஹரப்பிரியா     தாளம் - ரூபகம்

பல்லவி

வீர மாமயில் ஏறும் வேலவ - விளங்குங்
கௌரி பாலகா வா

அநுபல்லவி

கானக் குறத்தி மகிழும் பாதா
காக்கும் கடவுள் துதிக்கும் நாதா - வீர

சரணம்

எனக்கும் உனக்கும் பேத மேனோ
எடுத்துச் சொன்னால் போதம் போமோ
மணக்குஞ் சோலை நல்லூர் வாசா
வணங்கும் யோக சுவாமி நேசா - வீர

## எனக் கின்பமே வா

இராகம் - தோடி     தாளம் - திஸ்ரம்

பல்லவி

எனக்கின்பமே - வா

அநுபல்லவி

ஏரகம் பழனிப்பதி இலங்குங் கந்தசுவாமி நாதா
- எனக்கின்பமே

சரணம்

இரவும் பகலும் ஏத்தித் தொழும்
ஏழை யடியார்க் கிரங்கு வாய்நீ
எழிலார் நல்லூர் வாழும் வாசனே
ஏத்தும் யோக சுவாமி நேசனே!
- எனக்கின்பமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவற்கொடியோன் திருவடியைச் சிந்திப்பீர்

வெண்பா

பாவம்போம் பொல்லாப் பழிபோகும் பாருலகிற்
சேவற் கொடியோன் றிருவடியைச் - சாமளவுஞ்
சிந்திப்பீர் செல்வஞ் செறியிலங்கை நன்னாட்டீர்
வந்திப்பீ ரென்றும் மகிழ்ந்து

காமமுத லாறுங் கடிந்து கடிகமழுஞ்
சேமந் தருந்திவ்ய பாதத்தை - ஆமள்வும்
போற்றிப் புகழுவீர் பொன்னிலங்கை நன்னாட்டீர்
மாற்றிப் பிறக்க மருந்து

புன்னுனிமேல் நீர்போல் நிலையாத பொய்யுடலை
என்னினிநீர் எண்ணி வருந்துவீர் - மண்ணுலகில்
ஆறுமுகன் பாதத்தை யன்பா யிலங்கையீர்
கூறு மதுவே குணம்

இளமை நிலையா தெனவறிந்து வேலன்
பழமை தருமடியைப் பற்றும் - எழுமையும்
இன்பம் தருமே யிலங்கைமா நன்னாட்டீர்
அன்பிற் பணிவீ ரறிந்து

அறிவுக் கறிவாகி யப்பாற்கப் பாலாய்ச்
செறியும் முருகன் திருத்தாள் - நெறியுடனே
பற்றிப் பணிந்திடுவீர் பல்கா லிலங்கையீர்
வெற்றிதரு மென்றும் விளைவு

விளையுமிச்சை யெல்லாம் வெறுத்தேயெஞ் ஞான்றும்
இளையோன் றிருப்பாத மேத்த - மழைபோற்
கருணை வருமே கருதிலங்கை நபட்டீர்
தருண மிதுகண்டீர் தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேல் வேல்

அன்புடனே ஐந்தெழுத்தைச் சொல்லு - வேல்வேல்
ஆசா னடிக்கீழ் அமர்ந்துநீ நில்லு
கொஞ்சங்கொஞ்ச மாய்மனதை வெல்லு -வேல்வேல்
கூடாத கூட்டத்தை விட்டுநீ செல்லு

வஞ்சியர் ஆசையைத் தள்ளு - வேல்வேல்
வாணாள் ஆசையைப் பேணாமல் கொள்ளு
சஞ்சலம் வந்தால் வரட்டும் - வேல்வேல்
சற்றும் அலையாமல் சாந்தத்தில் கட்டு

அஞ்சுபூதமும் நீயல்ல நம்பு - வேல்வேல்
ஐம்பொறி ஐம்புலமும் நீயல்ல நம்பு
வெஞ்சினம்நெஞ்சில் வாராமல் காப்பாய் -வேல்வேல்
வேறு பொருளில்லா நிட்டையில் சேர்ப்பாய்

பஞ்சம் படைவந்த போது - வேல்வேல்
பரமன் திருப்பெயர் தப்பாமல் ஓது
நஞ்சைப்போல் பிறன்பொருள் எண்ணு - வேல்வேல்
நாங்கள் சிவமென நாளும்நீ நண்ணு

கஞ்ச மலர்ப்பதம் வாழ்க - வேல்வேல்
கருணை நிறைந்த பெரியோர்கள் வாழ்க
இந்திரன் முதலியோர் வாழ்க - வேல்வேல்
இவ்வுலகி லுள்ளோர் யாவரும் வாழ்க!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்குந் திருக்கூத்து

அங்குமிங்கும் எங்குந்திருக் கூத்து - அடடா
அதையறிதல் பத்தரைப்பொன் மாற்று

பொங்கிவருங் காமமே கூற்று - அடடா
புலன்வழியில் போகாமல் தேற்று

இடைபிங்க லையிரண்டும் சேர்த்து - அடடா
எழிலான சுழுமுனைக்குள் ஏற்று

மடைதிறந்தாற் போலவரும் ஊற்று - அடடா
மாமாயை சாராதெனச் சாற்று

பொங்கிவரும் அமிர்தத்தை யுண்டு - அடடா
பூரண நிட்டையிற்சேர் நன்று

மங்கள கரமாக வாழ்த்து - அடடா
மௌன நிலையிலே ஆழ்த்து

சங்கரன் திருப்பாதம் போற்று - அடடா
சாயுச்சியப் பதவியில் ஏற்று

நல்லூரான் திருப்பாதம் காப்பு - அடடா
நமக்குக்குறை வில்லைநல்ல வாக்கு

சொல்ல முடியாத தீர்ப்பு - அடடா
சுவாமி கிருபையுனக் காப்பு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமனை எங்கும் பார்

பார்பார் பரமனை எங்கும்
பதையாதேசுகம் இதயத்தில் தங்கும்
ஆர்தான் உனக்குநிகர் ஆவார்
ஐயப்படாதே தெய்வம் உன்னிடம் உண்டு

ஒருபொல்லாப்பு மில்லையென்ற வாக்கு
உணர்ந்துணர்ந் தின்பத்தில் தேக்கு
கருமத்தில் கையைநீ வைத்துக்
கடமையைப் பயமின்றி ஆக்கு

உண்மை முழுதுமென்று சாற்று
உனக்கொரு குறைவில்லை ஏற்று
கண்ணை இமைகாக்கு மதுபோல்
காப்பதுவேயுன் கடமை இனிமேல்

வீம்பிடும்பை ஆங்காரம் விட்டு
வேதாந்த நெறியினைக் கட்டு
ஓம்சிவாயநம என்று செபிப்பாய்
உள்ளத்திற் கள்ளத்தை அவிப்பாய்

நல்லூரான் திருவடியைப் பாடு
நாமேநாம் என்றுசொல்லி நாடு
கல்லுங் கரையக்கவி சொல்லு
காமக் குரோதத்தை வெல்லு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்த் தேரடியில் நான் கண்டேன

நேரிசை வெண்பா

பழம்பாக்கு வெற்றிலை பச்சரிசி தேங்காய்
இளநீர்தே னேந்தி யெழிலார் - அளவிலா
மங்கையரு மாடவரு மல்குநல்லூர்த் தேரடியில்
எங்குருவைக் கண்டே னினிது

காரார் குயில்பாடக் கார்வண்டு பண்பாட
ஆராத காத லடியரெலாஞ் - சீராகச்
சென்னியில் கைகுவித்தார் தேரடியிற் றேசிகனை
என்னையவன் பார்த்தா னினிது

இன்றைக்கோ நாளைக்கோ இன்னுநாட்சென்றிடுமோ
என்றடியா ரேத்து மினியவொலி - நன்றுடைய
நல்லூரிற் றேரடியில் நான்கண்டு போற்றினேன்
சொல்லுந் தரமோ சுகம்

காலன் வலிதொலையக் காலெடுத்தான் தந்தருளும்
பாலன்வாழ் நல்லைப் பழம்பதியிற் - கோலமுடன்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
ஆரென் றறிவா யடா

உவமை கடந்தவின்ப மெல்லார்க்கு முண்டு
தவஞ்செய்வார் தாமறிவர் தப்பார் - சிவனருளை
நோக்கென்றான் நோக்க நொடியளவி லேயின்பம்
தேக்கிற்றென் சிந்தை தெளிந்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூவு குயிலே

கூவுகுயி லேபறந்து கூவுகுயிலே
கும்பிடுவார் மனத்தானைக் கூவுகுயிலே

நம்பிக்கையாய்ப் பறந்து கூவுகுயிலே
நாங்கள்சிவ மென்றுசொல்லிக் கூவுகுயிலே

ஆதியந்தம் இல்லையென்று கூவுகுயிலே
அளந்தறியா ஒண்ணாதென்று கூவுகுயிலே

நீதிநெறி யைச்சென்று கூவுகுயிலே
நித்தியம்நாம் என்றுசொல்லிக் கூவுகுயிலே

ஊரும்பேரும் இல்லையென்று கூவுகுயிலே
ஒருபொல்லாப்பு மில்லையென்று கூவுகுயிலே

ஆருமறி யாரென்று கூவுகுயிலே
அகம்புறமும் இல்லையென்று கூவுகுயிலே

ஐம்பூதம்நா மல்லவென்று கூவுகுயிலே
ஐம்பொறிநா மல்லவென்று கூவுகுயிலே

ஆன்மாவே நாமென்று கூவுகுயிலே
அங்குமிங்கும் பறந்து கூவுகுயிலே

மாண்புட னேபறந்து கூவுகுயிலே
மரணம்பிறப் பில்லையென்று கூவுகுயிலே

நாமேநா மென்றுசொல்லிக் கூவுகுயிலே
நமக்குக்குறை வில்லையென்று கூவுகுயிலே

போமேபோம் வினையென்று கூவுகுயிலே
புண்ணியம்போல் பாவமென்று கூவுகுயிலே

நல்லூரான் வீதியிற்போய்க் கூவுகுயிலே
நல்லதொண்டர் நாமென்று கூவுகுயிலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூவாய் குயிலே

காட்டகத்தே வாழுங் கருங்குயிலே! கேளாய்
பாட்டகத்தே நின்றுருக்கும் பரமன் கருணையினால்
நாட்டகத்தே நம்போல நல்லூரில் வந்தானெம்
ஏட்டகத்தே எழுந்தருளும் வண்ணம்வரக் கூவாயே

அஞ்சுகங்காள் நாகணவாய் அழகான மயிற்குலங்காள்
மிஞ்சும் விரிபொழில்வாழ் வித்தாரப் பூங்குயிலே
பஞ்சின் அடிமடவாள் பாகர் பகர்நல்லூர்
வந்தா னவனை வரும்வண்ணங் கூவாயே

பூப்பொலியுங் கொம்பரில்வாழ் பூங்குயிலே நீகேளாய்
காப்பொலிகள் ஓவாக் களிதூங்கும் நல்லூரில்
நாப்பொலிவு தோன்ற வந்தாண்டான் நீயவனை
வாய்ப்பொலிவு தோன்ற வரும்வண்ணங் கூவாயே

தேனுந்து சோலைத் திருமனையில் வாழ்குயிலே
மானும் மழுவும் மறைத்துவந்து நல்லூரில்
நானும் அடியவரும் நன்கு களிசிறக்கப்
பேணும் குருபரனைப் பிரியமுடன் வரக்கூவாய்

காதலாற் பாடிக் கசிந்துருகும் பூங்குயிலே
தீதெலாம் நீக்கச் சிவபெருமான் என்போலப்
பூதலத்தில் நல்லூரிற் போந்தான் அவனையிங்கு
நீதேடி எங்கும் நினைத்துவரக் கூவாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்ல மருந்து

இராகம் - மோகனம் தாளம் - ரூபகம்

நல்ல மருந்தொரு குருமருந்தை நான்
நல்லூரிற் கண்டேனே (நல்ல)

எல்லையில் லாப்பிணி தீர்க்கு மருந்து
இம்மை மறுமைக்கு மேற்ற மருந்து
இல்லை யெனாது கொடுக்கும் மருந்து
ஏழை யடியார்க் கிரங்கு மருந்து (நல்ல)

வல்லவன் செல்லப்பன் தந்த மருந்து
வாழ்த்துங் கணபதிக்கு வந்த மருந்து
புல்லர்கள் கண்டும் புசியா மருந்து
புண்ணியர் யோகர் புசிக்கு மருந்து (நல்ல)

## நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி - கிளியே
இரவுபகல் காணெனெடி

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி - கிளியே
நல்லூரான் தஞ்சமடி

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமடி - கிளியே
கவலையெல்லாம் போகுமடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் - கிளியே
காவல் அறிந்திடெடி

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே
ஆறுமுகன் தஞ்சமடி

பரிதிகாயில் வாடாது
பவனம்வீசில் வீழாது
பரவைசூழில் ஆழாதெடி - கிளியே
படைகள் மோதில் மாயாதெடி

அந்தமாதி இல்லாத
ஆன்மாவே நாங்களென்று
சிந்தைதந்த செல்வனெடி - கிளியே
சீரார்நல்லூ ராசானெடி

வந்ததிலும் போனதிலும்
மனதைவை யாதேயென
விந்தையுடன் சொன்னானடி - கிளியே
விளங்குநல்லூர் வாசனெடி

சாதனை செய்தபேர்கள்
சாகார் உலகிலெனக்
காதலுடன் சொன்னானெடி - கிளியே
கலங்காத வீரனெடி

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாடல்பத்தும்
பூமியிற் சொன்னாலெடி - கிளியே
பொல்லாங்கு தீருமெடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை நம் நாடு

தூண்டு சுடர்ச்சோதி தொல்லுலகில் வந்துநமை
யாண்டுகொண் டானா மார்க்குங் குடியல்லோம்
வல்வினையும் பேச்சு வரம்பிலின்ப மேயாச்சு
நல்வினை சேரிலங்கை நாடு

வேண்டுதல் வேண்டாமை யில்லான் விரும்பிவந்து
ஆண்டுதான் கொண்டானா மார்க்குங் குடியல்லோம்
பொய்பேசு கில்லேம் புறங்கூறு கில்லேம்யாஞ்
செய்யா ரிலங்கை நமது

இல்லையென்று சொல்கிலோம் யார்பாலு மன்புடையோம்
எல்லையில்லா வின்ப மெவர்க்குங் குடியல்லோம்
தில்லைவாழ் தெய்வத் திருவடியைச் சிந்தித்து
நைவோ மிலங்கைநம் நாடு

தீமையெவர் செய்தாலும் சித்தத்திற் கொள்ளேம்யாம்
ஆமைபோ லடக்குவோ மார்க்குங் குடியல்லோம்
செய்வோம் சிவபூசை தீங்கவிகள் பாடுவோம்
உய்வோ மிலங்கைநம தூர்

அச்சமொடு கோபத்தை ஆகா வெனத்தடுத்தோம்
இச்சையெல்லாம் விட்டோம் எவர்க்குங் குடியல்லோம்
நெஞ்சிற்பஞ் சாக்கரத்தை நேச முடனுரைப்போம்
மஞ்சு தவழிலங்கை வைப்பு

ஆதியு மந்தமு மில்லைநமக் கென்றுமென
ஓதி யுணர்ந்தோ மொருவர் குடியல்லோம்
ஆறுங் குளமும் அணியார் பொழில்களுஞ்
சேருநம தூரிலங்கை தேர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

சிந்திக்க நெஞ்சும் தெரிசிக்கக் கண்ணிரண்டும்
வந்திக்கச் சென்னிபிறர் வைத்தகுடி நாமல்லோம் -அந்திசந்தி
வாழ்த்தி வணங்குவோம் வாயாரப் போற்றுவோம்
தாழ்த்திநிற் போமிலங்கை தாள்

எல்லார்க்கு மாங்கடவு ளொன்றென் றியம்புவோம்
பொல்லாங்கு செய்யோம் பிறர்குடி - யல்லோம்
கொலைகளவு கோபத்தைக் கொள்கிலேம் நெஞ்சில்
நிலையென் றிலங்கை நினை

நிற்போம் சமாதியிலே யென்றும் நிலைத்திருப்போம்
பெற்றோம் பிறர்க்கடிமை நாமல்லோம் - சுற்றந்
துறந்தோம் பிறவாத தொல்பதியைச் சேர்ந்தோம்
சிறந்தோ மிலங்கை தெரி

செல்வநிலை யாதென்று தேர்ந்தோம் சிவபெருமான்
நல்ல பதமறவோம் ஆளல்லோம் - அல்லலுற
மாட்டோ மவனி மதித்தாலு மின்புறோம்
வேட்டோ மிலங்கை வெளி

இலங்கைவாழ் தெய்வ மெமையாளுந் தெய்வம்
கலங்க விடாத்தெய்வம் காணின் - புலன்வழியிற்
செல்ல விடாத்தெய்வம் தேவர் தொழுந்தெய்வம்
நல்லதெய்வம் நாடோறும் நாடு

எல்லாந் தருந்தெய்வம் எல்லாமா குந்தெய்வம்
எல்லாந் தொழுந்தெய்வ மெந்தெய்வம் - நில்லாநீர்
செஞ்சடைசேர் தெய்வம் சிரஞ்சீவி யானதெய்வம்
அஞ்செழுத் தானதெய்வ மாம்

நிலனாகிக் காற்றாகி நீராகுந் தெய்வம்
அலகி லருக்கனு மம்புலியும் - பலபலவாம்
வேடங் கொளுந்தெய்வம் வேதாளஞ் சூழ்தெய்வம்
மாட மலியிலங்கை வாழ்வு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசானைக் கண்டேன்

நேரிசை வெண்பா

ஆசானைக் கண்டேன் அருந்தவர்வாழ் நல்லூரிற்
பேசா தனவெல்லாம் பேசினான் - கூசாமல்
நின்றேன்நீ யாரடா வென்றே யதட்டினான்
அன்றேயான் பெற்றே னருள்

அருளொளிக்குள் ளேபுகுந்து சென்றேன்யான் ஆங்கே
இருள்சூழ்ந் திருப்பதைக் கண்டேன் - பொருளறியேன்
ஓர்பொல்லாப் பில்லையென வோதினான் கேட்டுநின்றேன்
மர்மந்தே ராது மலைத்து

மலைத்துநின்ற வென்னை மனமகிழ நோக்கி
அலைத்துநின்ற மாயை யகலத் - தலைத்தலத்திற்
கைகட்டிச் சொல்லலுற்றான் கந்தன் திருமுன்றில்
மெய்மறந்து நின்றேன் வியந்து

வியந்துநின்ற வென்றனக்கு வேதாந்த வுண்மை
பயந்தீரும் வண்ணமவன் பண்பாய் - நயந்துகொள்
அப்படியே யுள்ளதுகாண் ஆரறிவார் என்றானால்
ஒப்பில்லா மாதவத்தோன் உற்று

உற்றாரும் போனார் உடன்பிறந்தார் தாம்போனார்
பெற்றாரும் போனார்கள் பேருலகில் - மற்றாரும்
தன்னொப்பார் இல்லாத் தலைவன் திருவருளால்
என்னொப்பா ரின்றியிருந் தேன்

வேறு

ஒடும்பு ளியம்பழ மும்போலும் உலகத்தை
நாடுதல் சீலமென்று ஞானிகள் முன்சொன்னார்
கோடுதல் இல்லாமல் குரைகழல் அடிபணி
வீடுனக் குண்டாகும் விருப்பமா யிதைப்படி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூத்தாடுதே மனமென்ன கொடுமை

பல்லவி

கூத்தாடுதே மனமென்ன கொடுமை
கும்பிட்டேன் குருநாதா உன்னடிமை

அநுபல்லவி

தீர்த்தங்க ளாடினேன் யாத்திரை செய்தேன்
சித்தந் தெளியவில்லை என்னநான் செய்வேன் -கூத்

சரணங்கள்

பார்த்த விடமெங்கும் நீயல்லா தில்லை
பாராமல் நானும் பட்டேன் தொல்லை
காத்தெனை யாள்வ துன்றன் கடமை
கருணைக் கடலே நானுன் உடைமை - கூத்

பக்திசெய் யோக சுவாமி பாட்டைப்
பாடிப் படிப்பவர் பல்லூழி காலம்
உத்தம ராக உலகினில் வாழ்ந்து
வித்தகன் சேவடி விரவிநிற் பாரே! - கூத்

## சிவ சிவ ஓம் ஓம்

சிவ சிவ செல்வக் கணபதி ஓம் ஓம்
சிவ சிவ செல்வவே லாயுதன் ஓம் ஓம்
சிவ சிவ செல்வச் சிவதொண்டன் ஓம் ஓம்
சிவ சிவ செல்வச் சிவனடியார் ஓம் ஓம்
சிவ சிவ எம்முள் திருவருள் ஓம் ஓம்
சிவ சிவ செல்வத் திருமால் ஓம் ஓம்
சிவ சிவ அயன்முதல் தேவர்கள் ஓம் ஓம்
சிவ சிவ ஐம்பெரும் பூதங்கள் ஓம் ஓம்
சிவ சிவ சிவ சிவ ஐம்பொறி ஓம் ஓம்
சிவ சிவ சிவ சிவ ஐம்புலன் ஓம் ஓம்
சிவ சிவ சிவ தச நாடிகள் ஓம் ஓம்
சிவ சிவ சற்குரு நாதன் ஓம் ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்மி

கும்மியடி பெண்ணே கும்மியடி குரு
நாதனைப் பாடிக் கும்மியடி
இம்மை மறுமைக்கும் எங்களை யாட்கொண்ட
எழிலைப் பாடிக் கும்மியடி

சிவனொ ருத்தனே தெய்வமடி தோழி
சென்னியிற் கங்கை பாயுதடி
அவனி டத்தினிற் பெண்ணைநீ பாரடி
எண்ணியெண் ணிக்கடைத் தேறடி

அவனன்றி யொன்றும் இல்லையடி பெண்ணே
அங்கையி லங்கியெ ரியுதடி
அவன்ற னாகத்தில் நாகமடி பெண்ணே
அரையி லேபுலி யுடையடி

அடிக்கீ ழரக்கன் கிடக்கி றானடி
அங்கையி லேமழு மானடி
துடியொ ருகையில் தோன்றுதடி பெண்ணே
சூலமுங் கையிற் றுலங்குதடி

குடிமு ழுதையும் ஆண்டுகொண் டானடி
சொல்லும் நமனை யுதைத்தான்டி
அடிமு டியொன்று மில்லையடி பெண்ணே
ஆனந்த மாய்க்கும்மி பாடடி

தூக்கிய பாதத்தின் தோற்றத்தைப் பாரடி
தொந்தோந் தோமென்ற நாதத்தைக் கேளடி
ஆக்கி யழிக்கவும் வல்லவ னவனடி
ஆனந்த மாய்க்கும்மி பாடுமடி

பாம்பும் புலியும் பார்த்திருந் தாரடி
பாரளந் தோனயன் பாடுபட் டாரடி
நாம்பு கழ்ந்திட நற்றரு ணமடி
நங்கைய ரேகும்மி பாடுமடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிப் புலன்வழி போகா தேயடி
மதிக்குள் ளேரவி சேர்த்திடடி
ஆறியிருந்து பாரடி பெண்ணே
அவனை நீகண்டு தேறடி

சித்தத்துள் நித்தந் தித்திக்குந் தேனடி
தீராப் பிணியைத் தீர்க்கும் மருந்தடி
பக்தர்கள் கண்டு பரவு வாரடி
பாவைய ரேகும்மி பாடுமடி!

## எல்லாஞ் சிவமே


அப்பனும் அம்மையுஞ் சிவமே அரிய சகோதரருஞ் சிவமே
ஒப்பில் மனைவியுஞ் சிவமே ஓதரும் மைந்தரும் சிவமே
செப்பில் அரசருஞ் சிவமே தேவாதி தேவருஞ் சிவமே
இப்புவி யெல்லாஞ் சிவமே என்னை யாண்டதுஞ் சிவமே.

## மங்களம் ஜெய மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதுந் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத்தன்னா லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுக்கட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீகாழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்குந்தங்கும் உயிர்களுக்கு மங்களம்
மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமிகளின் கால் பதிந்த பாடசாலை
(யாழ்./கொழும்புத்துறை
இந்து மகா வித்தியாலயம்)

**Selva Graphics, Canada Vivekananda Press, Jaffna**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org